நகர சபை, யாழ்ப்பாணம்.

Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு
THINAMURASU
தினப்பதிப்பு

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 14 திங்கட்கிழமை (28.03.2011) பக்கங்கள் 12+IV ஓசை – 179

யாழ் நகரில் ஒரு வான்வழி நிலையம்
(C/490)
SPICE
TRAVELS & TOURS (PVT) LTD®
IATA



412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)
Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

## முன்னாள் புலி உறுப்பினர்கள் 200 பேர் எதிர்வரும் மே மாதம் விடுவிக்கப்படுவர்

(கொழும்பு)

புனர்வாழ்வளிக்கப்பட்ட 200 முன்னாள் போராளிகள் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி விடுதலை செய்யப்படவுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க மற்றும் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் எம்.எஸ்.சதீஸ் தெரிவித்தனர்.

வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் வைத்து இவர்கள் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

தற்போது சுமார் 4,000 வரையான முன்னாள் போராளிகளே புனர்வாழ்வு நிலையங்களில் உள்ளனர்.

இவர்களுக்கு மேசன் மற்றும் தச்சுத் தொழில் போன்ற வாழ்க்கைத்திறன் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வளிப்பதற்கான 24 புனர்வாழ்வு நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் (11 ஆம் பக்கம் பார்க்க)

## புதியவர்களை உள்வாங்கும் வகையில் விரைவில் அமைச்சரவையில் மாற்றம்

(கொழும்பு)

அமைச்சரவையில் மாற்றமொன்றை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தேசித்துள்ளதாகவும், இந்த மாற்றத்தின்போது அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர் பதவிகளில் புதியவர்கள் நியமிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாற்றத்தின்போது முக்கியமாக பிரதமர் பதவி மாற்றம் .குறித்தும் பேச்சுக்கள் அடிபடுகின்றன. தற்போதைய நிலையில் பிரதமர் பதவிக்கு சமல் ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ ஆகிய இருவரில் ஒருவர் நியமிக்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் மிக விரைவில் அரசியலமைப்பு மாற்றமொன்றின் மூலமாக துணைப் பிரதமர் பதவியொன்றை உருவாக்கவும் ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார். அது பிரதமருக்குச் சமமான அதிகாரங்களைக் கொண்டிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் துணை ஜனாதிபதி என்றொரு பதவி மூலம் (11 ஆம் பக்கம் பார்க்க)



## இந்திய மீனவர்களின் அத்துமீறல்
# விரைவில் புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்று புதுடில்லியில் முக்கிய பேச்சு

(புதுடில்லி)

**கடல் வளங்களைப் பகிர்ந்து கொள்ளல் மற்றும் கடற்தொழில் துறையில் அபிவிருத்தியுடன்கூடிய ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று இலங்கை - இந்திய அரசுகளுக்கிடையில் செய்துகொள்ளப்படவுள்ளது. மேற்படி புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பான உயர்மட்டத்திலான பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகள் இன்று புதுடில்லியில் ஆரம்பமாகின்றன.**

இரு நாடுகளையும் சேர்ந்த உயர்மட்ட அதிகாரிகளுக்கிடையில் நடைபெறவுள்ள இப்பேச்சுக்களின்போது இலங்கையின் வடக்கு கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறி பிரவேசித்து மீன்பிடியில் ஈடுபடும் சம்பவங்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாடுகளால் இலங்கையின் வடபகுதி கடல்வளம் அழிக்கப்படுவது மட்டுமன்றி, கோடிக்கணக்கான பெறுமதியுடைய கடற்தொழில் உபகரணங்களும் அழிக்கப்பட்டுள்ளன.

இந்த விடயங்கள் உட்பட இவ்வாறான சேதங்கள் எதிர்காலத்தில் ஏற்படாத வகையில் (11 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி - எதிர்க்கட்சித் தலைவர் சித்திரகூட திறப்புவிழாவில் சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் நேற்றுக்காலை கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

கொழும்பு - 02 இல் அமைந்துள்ள சங்காராம விகாரையில் இடம்பெற்ற சித்திரகூட திறப்பு விழாவிலேயே இருவரும் சந்தித்துக் கொண்டனர்.

மிஹிந்தலை காலம் தொட்டு இன்றைய காலம் வரையில் பௌத்த விகாரைகளில் காணப்பட்ட ஓவியங்களை ஒன்றுதிரட்டி பிரஸ்தாப சித்திரக் கூடம் (11 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் மா அதிபருக்கு ஓய்வு; சேவை நீடிப்பு இனி இல்லை



(கொழும்பு)

பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரியவின் பதவிக் காலம் மிக விரைவில் முடிவடைய இருக்கின்றது. ஆயினும் அவர் தனக்கு அரசாங்கம் பதவி நீடிப்பை வழங்கும் என்ற பலத்த நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் கொண்டிருந்தார்.

அவ்வாறான நம்பிக்கையுடன் தனக்கு இன்னும் ஒரு வருட காலத்துக்கு சேவை நீடிப்பு வழங்கக் கோரி பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு கடிதமொன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

ஆனாலும் நீங்கள் உரிய காலத்துக்கு முன்பே ஓய்வு பெறுவீர்களாயின் நான் மிக்க (11 ஆம் பக்கம் பார்க்க)

## வெளிவிவகார அமைச்சர் பீரிஸை சந்திக்க நேரம் ஒதுக்காத பிரிட்டன் அமைச்சர்கள்

(கொழும்பு)

பரகுவே மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான பயணத்தின் ஒரு கட்டமாக பிரிட்டன் செல்லவுள்ள வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹக்கியை சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு கோரியுள்ள போதிலும், அவரிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்புச் சாத்தியமற்றதாகிப் போனாலும், அவருக்கு அடுத்த நிலையில் உள்ள பிரதி வெளிவிவகார அமைச்சர் அலிஸ்ரெயர் பேர்ட்டை சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறும் ஜி.எல்.பிரிஸ் கேட்டுள்ளார்.

ஆனால் அவரும் இதுவரை சந்திப்புக்கான நேரத்தை ஒதுக்கிக் கொடுக்கவில்லை.

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சரோ அல்லது பிரதி வெளிவிவகார அமைச்சரோ அமைச்சர் பீரிசை சந்திப்பதற்கான நேரத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவில்லை என்று லண்டனிலுள்ள இலங்கையின் பிரதித் தூதுவர் அம்சா தெரிவித்துள்ளார்.



ஆனாலும் அமைச்சர் பீரிஸ், பிரித்தானிய பாதுகாப்புச் செயலர் லியம் பொக்ஸ், வர்த்தக முதலீட்டு அமைச்சர் வில்லியம் (11 ஆம் பக்கம் பார்க்க)

## பெண் சிப்பாய்கள் மயக்கம்; உணவு ஒவ்வாமை காரணம்

(கிளிநொச்சி)

வன்னியிலுள்ள இராணுவ முகாமொன்றில் பணியாற்றும் பெண் இராணுவத்தினருக்கு வழங்கப்பட்ட உணவில் ஏற்பட்ட மாற்றத்தினால் பத்திற்கும் மேற்பட்ட பெண் இராணுவத்தினர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உணவில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக பாதிக்கப்பட்ட இந்த பெண் இராணுவத்தினர், சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றிரவு 8.30 மணியளவில் இந்த 10 பேரும் உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## இறுதிக் கட்ட சாட்சியங்களை பதிவுசெய்கிறது ஆணைக்குழு

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு, தனது இறுதிக்கட்ட சாட்சியங்களைப் பதிவுசெய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக ஆணைக்குழுவின் ஊடக ஆலோசகர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு, கல்முனை மக்களிடம் சாட்சிப் பதிவுகளை மேற்கொள்ள தீர்மானித்துள்ளது.

அத்துடன் வெளிமாவட்டத்தில் சாட்சிப்பதிவுகளை மேற்கொள்ள இன்னும் ஒரு பிரதேசம் மாத்திரமே எஞ்சியுள்ளது.

அதுவும் நிறைவு பெற்றதும், (11 ஆம் பக்கம் பார்க்க)

### மாணவச் செல்வங்களே!

உள்ளே கல்வி முரசு.

**◆தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை - 2011 பகுதி I இன் வினாக்கள் இணைக்கப்பட்டுள்ளது.**

# அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு மீள்குடியமர்ந்த மக்கள் கோரிக்கை விடுப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு எந்த ஒரு அடிப்படை வசதியும் வழங்கப்படவில்லை என அப்பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவர்கள் கடந்த ஒரு வருடங்களுக்கு முன்னர் இப்பகுதியில் மீள்குடியேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஆனால் இவர்களுக்கு எந்த ஒரு அடிப்படை வசதியும் செய்து கொடுக்கப்படவில்லை. இவர்கள் தற்காலிக தறப்பாள்களினால் அடைக்கப்பட்ட குடிசைகளிலேயே வெயிலிலும் மழையிலும் வசித்து வருகின்றனர்.

வயோதிபர்கள், சிறுவர்கள் அடங்களாக இத் தற்காலிக குடிசையில் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் இப்பிரதேசத்தில் வைத்தியசாலை வசதிகள் இல்லாமையால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர். இதனால் இப்பகுதி நோயாளர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்கள் பல மைல் தூரம் சென்றே மருத்துவ வசதிகளை பெற்றுக்கொள்கின்றனர்.

இவ்வாறு பல மைல் தூரம் செல்லும் மக்களுக்கான போக்குவரத்து வசதிகளும் குறைந்தே காணப்படுகின்றன. பாதைகள் சேதமடைந்து காணப்படுவதனால், உடனடியாக இவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் உள்ளது.

மேலும் இவர்களுக்கான கல்வி வசதிகளும் குறைந்தே காணப்படுகின்றன. பாடசாலைகளில் அடிப்படை வசதிகள் இன்மை ஆசிரியர் பற்றாக்குறை வளங்கள் இன்மையினால் மாணவர்கள் கல்வி கற்பதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இவர்களுக்கான அடிப்படை வசதிகளை உடனடியாகச் செய்து தருமாறு அபபிரதேச மக்கள் குறித்த அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கின்றனர்.

# சிறைக் கைதிகளும் பயிர்ச் செய்கையில்

(கொழும்பு)

எதிர்வரும் காலங்களில் சிறைக்கைதிகளை அவ்வப் பிரதேசங்களில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தற்போதைய நிலையில் சுமார் முப்பதாயிரம் வரையிலான நபர்கள் சிறைக்கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு நாளாந்தம் பத்து இலட்சம் ரூபா வரையில் உணவுக்காக மட்டுமே செலவிடப்படுகின்றது.

அதற்கு மேலதிகமாக மருத்துவ வசதிகள், மின்சாரம், தண்ணீர், சவர்க்காரம் என அதனையொத்த இன்னொரு தொகையும், அவர்களைக் கண்காணிக்கும் சிறைக்காவலர்களுக்குப் பெருந்தொகையொன்றைச் சம்பளமாகவும் வழங்க நேர்ந்துள்ளது.

அதன் காரணமாக இனி வரும் காலங்களில் சிறைக் கைதிகளைக் கொண்டு பயிரிடும் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் தேசிய அபிவிருத்தியில் அவர்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ள அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

அதன் முதற்கட்ட செயற்பாடு வீரவில சிறைச்சாலையிலிருந்து ஆரம்பிக்கப்படும் என்று சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

# ஜனவரி, பெப்ரவரி மாத அனர்த்தத்தால் 793 பாடசாலைகள் சேதமடைந்துள்ளன

(கொழும்பு)

கடந்த ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் பெய்த கடுமையான மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு, மண்சரிவு காரணமாக நாட்டில் 793 பாடசாலைகள் சேதமடைந்துள்ளதாகவும், இவற்றைத் திருத்தியமைப்பதற்கு ஆயிரத்து 29 மில்லியன் ரூபா தேவையெனவும் கல்வியமைச்சு மதிப்பிட்டுள்ளது.

கட்டட மீள்நிர்மாணம், வகுப்பறை, ஆய்வுகூட வசதிகள், விளையாட்டு மைதானம், பார்வையாளர் விடுதி என்பனவற்றைப் புனரமைக்கவே பெரு மளவு நிதி தேவையாகவுள்ளது.

இந்த அனர்த்தத்தினால் மத்திய மாகாணத்தில் 15, ஊவாவில் 17, வடமத்திய மாகாணத்தில் 153, கிழக்கு மாகாணத்தில் 604, தென் மாகாணத்தில் 02, மேல் மாகாணத்தில் 02 பாடசாலைகள் சேதமடைந்துள்ளன.

சேதமடைந்த பாடசாலைகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

## விசேட வகுப்புக்கள்

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு விசேட வகுப்புக்கள் நடத்தப்படும் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கு வழங்கப்பட்டது போலவே இது அமையும் என அவர் மேலும் தெரிவித்தார். சிரேஷ்ட விரிவுரையாளர்களினால தயாரிக்கப்பட்ட மாதிரி வினா விடைகளைக் கொண்ட கொத்து விசேட வகுப்புக்களில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கு வழங்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இப்படியான விசேட வகுப்புக்களை மேற்கொள்வதன் காரணமாக கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றியவர்களின் பெறுபேறுகள் சிறந்த வகையில் அமைந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

# மாநகரை அண்டிய கரையோர பிரதேசங்களில் அதிகரித்த விலையில் அத்தியாவசியப் பொருட்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரை அண்டிய கரையோரப் பிரதேசங்களில் உள்ள கடைகளில் விற்கப்படும் அத்தியாவசிப் பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்கள் என்பன அதிகூடிய விலையில் விற்கப்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சாதாரணமாகக் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை 15 முதல் 20 ரூபா வரை இலாபமாக வைத்து விற்பனை செய்யப்படுவதாகவும், இதனால் பொருட்களை கொள்வனவு செய்வோர் அதிகூடிய விலையிலேயே தாங்கள் கொள்வனவுகளை மேற்கொள்வதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

ஒரு சில கடைகளில் விற்பனைப் பட்டியல் கடைக்கு முன்னால் காட்சிப்படுத்தப்படாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் தேனீர்க் கடைகளில் ஞாயிற்றுக்கிழமைகளில் ரொட்டிகளையும் ஏனைய உணவுகளையும் வாங்கும்போது 3 ரொட்டி வாங்கினால் கறி கட்டிக் கொடுப்பதில்லை என்ற நடைமுறையும், ஏனைய நாட்களில் வாங்கினால் அந்த நடைமுறை இல்லாமல் சாதாரண நிலையில் விற்கப்படுவதாகவும், வடைகள் மற்றும் றோள், இட்லி, தோசை போன்ற உணவுகளின் அளவுகள் விற்கப்படும் விலைக்கு பொருத்தமற்றதாக இருப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (21)

# மக்களின் கோரிக்கையை அடுத்து அனலைதீவுக்கு பகலிலும் மின்சாரம்

(ஊர்காவற்றுறை)

அனலைதீவுப் பகுதிகளில் தற்போது காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை திங்கள், புதன், வெள்ளிக்கிழமை வரை மின்சார விநியோகம் இடம்பெற்று வருவதாகவும், இதனால் அப்பிரதேச மக்கள் பெரிதும் நன்மையடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பகுதிகளில் இதுவரை காலமும் இரவு வேளைகளில் குறிப்பிட்ட நேரத்திற்கு மட்டும் மின்பிறப்பாக்கி மூலம் மின்விநியோகம் இடம்பெற்று வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து அப்பிரதேசத்தில் கல்வி கற்கின்ற மாணவர்களின் கற்றல் செயற்பாட்டைக் கருத்திற் கொண்டு பொதுமக்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் மாத்திரம் காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை மின் விநியோகம் வழங்கப்பட்டு வருவதாகவும் இதனால் அன்றாட செயற்பாடுகளை இலகுவாக மேற்கொள்ளக் கூடியதாக உள்ளதாகவும் அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (14)


# மக்கள் வங்கி அறிவித்தல்

PEOPLE'S BANK

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.03.2010 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதியில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| தொடர் இல. | கிளை | ஏலம்விடப்படும் திகதி | ஏலம்விடப்படும் இடம் |
|---|---|---|---|
| 01. | யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளையும், மானிப்பாய் சேவை நிலையமும், நாவலர் வீதி சேவை நிலையமும். | 15.05.2011 மு.ப.8.30 | மக்கள் வங்கி, யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளை -030 |
| 02. | காங்கேசன்துறைக் கிளையும், மல்லாகம் சேவை நிலையமும் | | |
| 03. | யாழ்.பிரதான வீதிக்கிளையும், உரும்பிராய் சேவை நிலையமும் | | |
| 04. | ஊர்காவற்றுறை | | |
| 05. | நெல்லியடி | | |
| 06. | அச்சுவேலி | | |
| 07. | சங்கானைக்கிளையும், பண்டத்தரிப்பு சேவை நிலையமும் | | |
| 08. | சுன்னாகக்கிளையும், கோப்பாய் சேவை நிலையமும் | | |
| 09. | சாவகச்சேரிக்கிளையும், கொடிகாமம் சேவை நிலையமும் | | |
| 10. | வல்வெட்டித்துறை | | |
| 11. | யாழ்.பல்கலைக்கழகக்கிளையும், திருநெல்வேலி சேவை நிலையமும், கல்வியங்காடு சேவை நிலையமும் | | |
| 12. | யாழ்.கன்னாதிட்டிக்கிளையும், இணுவில் சேவை நிலையமும் | | |
| 13. | பருத்தித்துறைக்கிளையும், புலோலி சேவை நிலையமும் | | |

அறிவித்தலின்றித் திகதியை ஒத்திப்போடுவதற்கும், ஏலம்விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி, பிரதேச காரியாலயம்,**
**கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**

**2011.03.28** (C/630)




பாரம்பரிய நாட்டுப்புற இசை வடிவங்களின் கொண்டாட்ட நிகழ்வுகளின் இறுதிநாளின்போது பொம்மலாட்ட நிகழ்வு நடைபெறுவதையும், இந்நிகழ்வில் கலந்துகொண்டோரையும் காணலாம். (படம்: மிதிலன்)

நம்மால் எப்படி இந்தப் பெரிய காரியத்தைச் செய்ய முடியும் என்று நினைத்து நல்ல செயல்களைச் செய்யாமல் இருந்துவிடாதே. நீர் துளித் துளியாகக் கொட்டியே குடம் நிரம்பிவிடும்.

-புத்தர்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

# பொறுப்புடன் கூடிய கடமை உணர்ச்சி

அண்மைக்காலமாக தினமும் இடம்பெற்று வரும் வீதி விபத்துச் சம்பவங்கள் மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளன.

வீதி விபத்துக்கள் என்று குறிப்பிடும்போது யாழ்.குடாநாட்டில் மட்டும் இடம்பெற்று வரும் ஒரு சம்பவமல்ல. நாட்டின் பல பகுதிகளிலும் சர்வசாதாரணமாக இடம்பெற்று வரும் சம்பவமாகவே உள்ளது.

யாழ்.மாவட்டத்தில் தினமும் இரண்டொரு வீதி விபத்துக்கள் இடம்பெற்று வருகின்ற போதும், கடந்த வாரம் ஒரே தினத்தில் நான்கு சம்பவங்கள் இடம்பெற்றிருந்தமை கவலையளிக்கக் கூடிய சம்பவமாக அமைந்துவிட்டது.

அன்றாடம் அதிகரித்து வரும் வாகன விபத்துக்களினால் பெறுமதி வாய்ந்த உயிர்கள் இழக்கப்படுவதுடன், காயமடைந்தோரில் பெரும்பாலானோர் அங்கவீனர்களாக மாறி வருவதுடன், இயல்பு வாழ்வுக்குத் திரும்ப முடியாதவர்களாகி விடுகின்றனர். இது வேதனை தரும் விடயமாகவுள்ளது.

இத்தகைய வீதி விபத்துக்களுக்கு காரணமென்ன? இன்றைய சூழ்நிலையில் இது அவசியம் கண்டறியப்பட வேண்டியதொன்றாக உள்ளது.

வீதிப் போக்குவரத்து நடைமுறை ஒழுங்கு விதிமுறைகளைப் பேணாமல், அதனை மீறி நடப்பதும், சாரதிகளின் பொறுப்பற்ற வாகனச் செலுத்துதலும், வீதிகளின் அவலநிலையும், வாகனங்களின் அதிகரிப்புமே காரணம் என அறியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாகனச் சாரதிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் மதுபோதையில் வாகனங்களைச் செலுத்துவதும், கைத்தொலைபேசிப் பாவனையுமே விபத்துக்களுக்குக் காரணமெனக் கூறுகிறார்கள்.

இவற்றைச் சட்டத்தின் மூலமே தடுத்து நிறுத்தக் கூடிய வாய்ப்புகள் உண்டு. குற்றம் விளைவித்த ஒரு சாரதியிடம் தண்டப்பணம் அறிவிடுவது மட்டும் போதுமானதல்ல. போக்குவரத்துப் பொலிஸார் இறுக்கமான நடைமுறைகளைக் கையாள்வதுடன், விழிப்புடன் கடமைகளைச் சரிவரச் செய்ய முன்வர வேண்டும்.

வாகனங்களின் வேகக் கட்டுப்பாட்டை மட்டுப்படுத்துவதற்கு நவீன தொழில் நுட்பமுறைகளைக் கைக்கொள்வதுடன், சமிக்ஞைகளையும் அவசியம் நிறுவ வேண்டும்.

பிரதிப் போக்குவரத்து அமைச்சர் தெரிவித்திருப்பது போல சாரதியினர் பொறுப்பை உணர்ந்து கொள்ளக் கூடிய வகையில் பயிற்சிகள் அவசியம் வழங்க நடவடிக்க எடுக்கவேண்டும்.

நாடுதழுவிய ரீதியில் 664 சாரதிப் பயிற்சிப் பாடசாலைகள் மட்டும் இலங்கைப் போக்குவரத்துச் சபை நடத்தி வருவதாகவும், ஏனையவை தனியார் பயிற்சிப் பாடசாலைகளாகவே உள்ளன. இவர்கள் மூலம்தான் சாரதி அனுமதிப்பத்திரமும் பெற்றுக் கொள்ளப்படுகிறது.

சாரதிப் பயிற்சியைப் பெறாமலேயே சாரதி அனுமதிப்பத்திரங்கள் பெற்றவர்களினாலேயே பெரும்பாலான விபத்துச் சம்பங்கள் இடம்பெறுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. வீதிகளைப் பொறுத்தவரையில் தற்போது வீதிகள் அகலமாக்கப்பட்டும், புனரமைக்கப்பட்டும், 'காபற்' போடப்படுவதால் வீதிகளின் தரத்தைப் பற்றி எந்நேரமும் குறை கூறுவதில் அர்த்தமில்லை. வீதிகள் காபற் மயமாக்கப்படுவதும், அகலமாக்கப்படுவதும் மேலும் பெரும் விபத்துச் சம்பவங்கள் அதிகரிக்க வாய்ப்பு உண்டு எனவும் கருதப்படுகின்றது.


எனவே எப்படி இருப்பினும் பொதுமக்கள், வாகன ஓட்டுநர்கள் சுயநினைவுகளுடன் வீதி ஒழுங்கு முறைகளை மீறாமல் அதனை அனுசரித்து வருவார்களானால் வீதி விபத்துக்களை ஓரளவுக்காவது தடுக்க முடியும்.

இதில் பொலிஸாரின் பொறுப்புடன் கூடிய கடமையுணர்ச்சி மேலோங்கி நிற்க வேண்டுமென்பதே எமது விருப்பமாகும்.

-ஆசிரியர்-

# இலங்கை முஸ்லிம்களிடம் தீவிரவாதப் போக்கு இல்லை

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் எந்தவித தீவிரவாதமும் இல்லை. இங்கு இருப்பது உரிமைப் போராட்டம் மாத்திரமே என நீதி அமைச்சரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

சிறிலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 15ஆவது வருட மாநாடு கொழும்பு ரண்முத்து ஹோட்டலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போது, அதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மீடியா போரத்தின் தலைவர் என்.எம்.அமீன் தலைமையில் இந்த மாநாடு நடைபெற்றது. முஸ்லிம்களுக்கென தனியான ஊடகம் தேவை என்ற கோரிக்கை பரவலாக எல்லோராலும் முன்வைக்கப்படுகின்றது.

இலங்கை முஸ்லிம்களிடத்தில் எந்தவித தீவிரவாதமும் இல்லை. எமக்கு இருப்பது உரிமைப் போராட்டம் மட்டுமே. உரிமைப் போராட்டம் நடக்கும் நேரத்தில் முஸ்லிம்களிடம் தீவிரவாதப் போக்கு ஏற்படும் நிலை தோன்றும்போது, அதை முஸ்லிம் அரசியல் தலைமைகளும் கட்சிகளும் தடுத்து நிறுத்திவிடுகின்றன என்றும் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்த பின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும், சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸிற்கும் நெருக்கமான உறவு வளர்ந்து வருவதாகவும் ஹக்கீம் தெரிவித்தார்.

இந்தச் சாதகமான நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் முஸ்லிம்களுக்கான தனியான ஊடகத்தேவை பற்றிப் பேசக் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது என்றும் ஹக்கீம் தெரிவித்தார்.

# குருநகர் மீன்பிடித் துறைமுகப் பகுதி வாய்க்கால் ஆழமாக்கப்படவுள்ளது

(வவுனியா நிருபர்)

இலங்கையில் மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்யும் நோக்கில் சகல வசதிகளும் கொண்ட மீன்பிடித் துறைமுகங்களை அமைக்கும் கடற்றொழில் அமைச்சின் நிதியுதவியுடன் குருநகர் துறைமுகம் அமைக்கும். பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

துறைமுகப் பகுதி 5 மீற்றர் ஆழமாக்கப்படுவதுடன், துறைமுகப் பகுதியில் இருந்து கடற்கலங்கள் வெளிக் கடலுக்குச் செல்வதற்கு வசதியாக 3 கிலோமீற்றர் நீளமான வாய்க்கால் ஆழமாக்கப்படவிருக்கிறது.

இப்பகுதியில் எரிபொருள், தண்ணீர், பனிக்கட்டி பெறுவதற்குரிய வசதிகள் ஏற்படுத்தப்படுவதுடன், மீன் ஏல விற்பனை நிலையம், இளைப்பாற்று மண்டபம், கலங்கள் பழுது பார்க்கும் நிலையமும் அமையவிருக்கிறது.

மொறட்டுவப் பல்கலைக்கழக குழுவினரின் ஆய்வின்படி குருநகர், சிலாபத்துறை, கந்தற ஆகிய இடங்களில் சகல வசதிகளுடன் கூடிய மீன்பிடித்துறை முகங்கள் அமைக்கப்பட வேண்டுமென்ற சிபாரிசின்படி மூன்று மீன்படித் துறைமுகங்கள் அமைக்கப்படவிருப்பதாக துறைமுகக் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (70)

## கோட்டை-வவுனியாவிற்கான ரயில் சேவையில் நேரமாற்றம்

(வவுனியா நிருபர்)

கோட்டையிலிருந்து வவுனியா வரும் இரவு தபால் புகையிரதம் நேற்று முன்தினம் சனிக்கிழமை முதல், நேரமாற்றம் செய்யப்பட்டுள்ளது என ரயில்வே திணைக்களம் தெரிவிக்கின்றது.

இதுவரைகாலமும் இரவு 9.45 இற்கு கோட்டையிலிருந்து புறப்படும் வந்த தபால் புகையிரதம் இரவு 8.30 இற்குப் புறப்பட்டு அதிகாலை 3.10 இற்கு வவுனியா வந்தடையும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதே நேரத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு வவுனியாவிலிருந்து கோட்டைக்குப் புறப்படும் யாழ். தேவி சனிக்கிழமை முதல் பிற்பகல் 2.30 மணிக்குப் புறப்பட்டு கோட்டையினை இரவு 7.10 இற்குச் சென்றடையும் என நேரமாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக ரயிலவே அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த ரயிலின் பயணக் கட்டணம் சாதாரணமானது என அதிகாரிகள் தெரிவித்தனர். (39)

# காலாவதியான மருந்துகள், பிஸ்கட்டுகள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் விசனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் உள்ள அதிகமான மருந்தகங்களில் காலாவதயான மருந்துப் பொருட்கள் மற்றும் பிஸ்கட்டுக்கள் விற்கப்படுவதாக நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

காலாவதியான மருந்து வகைகள பெட்டிகளில் அடைத்து விற்கப்படாது, அவை சொரியலாக மாற்றப்பட்டு விற்கப்படுகின்றன.

அதனைவிட பிஸ்கட் பைக்கற்றுக்களுக்குப் புதிய திகதியிடப்பட்ட சிட்டை ஒட்டப்பட்டு விற்கப்படுகின்றன.

இவ்வாறு காலாவதியான மருந்துப் பொருட்கள், பிஸ்கட்டுக்கள் போன்றவற்றை பயன்படுத்துவதால் மக்களே பெரிதும் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

சுகாதாரப் பகுதியினர் சகல மருந்தகங்களிலும் திடீர்ச் சோதனைகளை நடத்தி இப்படிப்பட்ட காலாவதியான பொருட்களைக் கண்டுபிடித்து அவற்றை அழிக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதனைவிட சில மருந்தகங்களில் பூச்சு மருந்துகள் அதாவது ரியூப்புகளில் அடைத்துவரும் கிறீம் மற்றும் ஒயில்மண்ட் போன்றவையும் காலாவதியாகியுள்ளன எனச் சுட்டிக் காட்டப்பட்டது. (வி)

# "தகவல் தொழில்நுட்பம் - 2009" விருதிற்கு வடமாகாணத்தில் 20 பாடசாலைகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத் துறையில் பாடசாலைகளில் செயற்திறனை மதிப்பீடு செய்து விருது வழங்கும் நோக்குடன் 2009 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு அதன் பின்னரான தொடர் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. அம் மதிப்பீடுகளின் அடிப்படையில் வடமாகாணத்தில் இவ்விருதுக்காகத் தெரிவு செய்யப்பட்ட 20 பாடசாலைகளின் விபரங்கள் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனால் வெளியிடப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் குறித்த பாடசாலைகள் தங்களுக்கான விருதைப் பெற்றுக்கொள்வதற்குரிய அறிவுறுத்தல்கள் http//school net.lk இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இவ் அறிவுறுத்தல்களின் பிரகாரம் இவ்விருதை உங்கள் பாடசாலையின் ஐ.சி.ரி. கற்றல், கற்பித்தல் துறையில் எவ்வாறு பயன்படுத்தப்படவுள்ளது என்பது குறித்து ஓர் செயற்றிட்ட முன்மொழிவை தாங்கள் தயாரித்து எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் Online இல் சமர்ப்பிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

விருது பெறும் பாடசாலைகளின் பெயர் வருமாறு-

கொக்குவில் இந்துக் கல்லூரி, உரும்பிராய் இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, புத்தகலட்டி சிறிவிஷ்ணு வித்தியாலயம், இடைக்காடு மகா வித்தியாலயம், யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை, யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மடம், நடராஜர் இராமலிங்கம் வித்தியாலயம், சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை, வவுனிக்குளம ஜி.ரி.எம்.எஸ், மாதகல் சென். ஜோசப் மகா வித்தியாலயம், மேலைப புலோலி சிவப்பிரகாச வித்தியாலயம், மண்டைதீவு மகா வித்தியாலயம், வல்வெட்டித்துறை ஆர்.சி.ரி.எம்.எஸ், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயம், கட்டைவேலி யார்க்கரு வித்தியாலயம், பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, வேலணை மகா வித்தியாலயம், யாழ்ரன் கல்லூரி. (109)

# அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு உதவித்திட்டம்

(வடமராட்சி)

கடந்தகாலப் போர் அனர்த்தங்களினால் ஏற்பட்ட இடப்பெயர்வுகள், இயற்கை அனர்த்தங்கள் என்பனவற்றால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணக் கடற்றொழிலாளர்களுக்கு உதவும் வகையிலான பல்வேறு உதவித்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜிதசேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அமைச்சு அலுவலகத்தில் தன்னைச் சந்தித்த வடமாகாண கடற்றொழில் கூட்டமைப்பு பிரதிநிதிகளிடமே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்:

ப்ாதிக்கப்பட்டவர்களின் தேவைப்பட்டியல் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் அவர்களுக்குப் படகு வெளியிணைப்பு இயந்திரம் 2 மில்லியன் ரூபாவுக்கு உட்பட்ட கடன் 5.1/2 வீத வட்டியில் வழங்கப்படும் எனவும், இவர்களுக்கு 5 வருடத்துக்கு வருமானவரி விலக்கு அளிக்கப்படும் எனவும் கடற்றொழில் கலங்களுக்குரிய அனுமதிக்கட்டணம் வழங்குதலில் விலக்களிக்கப்பட்டுள்ளதாகவும் ஒவ்வொரு கடற்றொழிலாளரும் காப்புறுதித் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படவேண்டுமெனவும் ஒரு வருடத்துக்கு தொடர்ச்சியாக மாதமொன்றுக்கு ரூபா 250 வீதம் செலுத்தினால் ஒரு இலட்சம் ரூபாவும், மூன்று வருடத்துக்கு மாதமொன்றுக்கு ரூபா 250 வீதம் செலுத்தினால் மூன்று இலட்சம் ரூபாவும், இழப்பு எதுவாக இருந்தாலும் காப்புறுதிப்பணம் வழங்கப்படுமெனவும்,

திடீர் விபத்து ஏற்படும் பட்சத்தில் குடும்பத்திலுள்ள இரண்டு பிள்ளைகளுக்கு ஒவ்வொருவருக்கும் மாதம் ரூபா 250 வீதம் புலமைப்பரிசில் வழங்கப்படுமெனவும்,

கடற்றொழிலாளர் ஒருவர் கடலில் காணாமல் போனால் ஒரு வருடத்திற்கு மாதமொன்றிற்கு ரூபா 5,000 அவரது குடும்பத்திற்கு வழங்கப்படுமெனவும், பின்னர் தொடர்ச்சியாக மாதமொன்றுக்கு ரூபா 1500 வீதம் வழங்கப்படுமெனவும் ஓய்வூதியம் மாதமொன்றிற்கு ரூபா 7500 வரை வழங்கவுள்ளதாகவும் இதனை ரூபா 10,000 வரை அதிகரிக்கவிருப்பதாகவும், கடற்றொழிலாளி மரணமடையும் பட்சத்தில் அவரின் மனைவிக்கு இதே தொகை ஓய்வூதியம் வழங்கப்படவிருப்பதாகவும் தெரிவிததார்.

மேலும் ஒவ்வொரு கடற்றொழிலாளியின் குடும்பத்துக்கும் ஒவ்வொரு வீடும் அமைத்துக் கொடுக்கப்படவிருப்பதுடன் குடும்பத்திலுள்ள பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்படவிருக்கின்றன.

ஒவ்வொரு கடற்தொழிலாளியினதும் காப்புறுதிப் பத்திரம் சேதமடைந்தாலோ, காணாமற் போயிருந்தாலோ உரியவருககு காப்புறுதிப்பணம் வழங்கப்படுமெனவும் தெரிவித்தார். (70)

# தேசிய சுகாதார தர நிர்ணயப்போட்டி யாழ்.பணிமனைக்கு மூன்றாம் இடம்

(யாழ்ப்பாணம்)

மத்திய சுகாதார அமைச்சினால் 2009,2010 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய சுகாதார தர நிர்ணயப்போட்டிகள் 8 பிரிவுகளாகப் பிரித்து நடாத்தப்பட்டது.

இதில் சுகாதார முகாமைத்துவ நிறுவனங்களில் 9 மாகாண சுகாதார சேவைகள் பணிமனைகளும் 25 பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையும் போடடியிட்டன. இதில் யாழ்.பிராந்திய, சுகாதார சேவைகள் பணிமனைக்கு மூன்றாம் இடம் கிடைத்துள்ளது.

இதேவேளை 9 பொது வைததியசாலைகளும் 45 பிராந்திய வைத்தியசாலைகளும் ஒரே பிரிவில் போட்டியிட்டன. இதில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

பிரதேச வைத்தியசாலைகள் பிரிவில் வல்வெட்டித்துறைப் பிரதேச வைத்தியசாலைக்கு சிறப்புப் பரிசு வழங்கப்பட்டது. (மி)

# சீரற்ற உருத்திரபுர பஸ் சேவை; மாணவர்கள், ஊழியர்கள் சிரமம்

(கிளிநொச்சி)

உருத்திரபுரத்திற்கான இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகளின் போக்குவரத்துகள் சீராக நடைபெறாமையால் உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சியில் இருந்து உருத்திரபுரத்திற்கு சேவையில் ஈடுபடும் பேருந்துகள் சில வேளைகளில் தாமதமாக வருவதனால் பேருந்திற்காக கரடிப்போக்குச் சந்தியில் காத்துக் கிடப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை இவ்உத்தியோகத்தர்களுக்கு பருவகாலச் சீட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (69)

# சிரமதானம் மூலம் பாதீனியம் ஒழிப்பு

(வவுனியா நிருபர்)


வவுனியா - இறைம்பைக்குளம் கிராமசேவையாளர் பிரிவில் கடந்த சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட பாதீனிய ஒழிப்பு மற்றும் டெங்கு ஒழிப்புச் சிரமதானத்தில் கிராம மக்கள் பலர் கலந்து கொண்டனர்

பொலிஸ் பொதுமக்கள் உறவு - பிரிவு இன்ஸ்பெக்டர் மகிந்த ஜெனசேனாவின் ஆலோசனைக்கு அமைய பிரிவுக்குப் பொறுப்பான கான்ஸ்டபிள் வி.தாழமுத்து மற்றும் கிராமசேவையாளர் வி.வேலுப்பிள்ளை ஆகியோரின் வழிகாட்டலில் நடைபெற்ற இந்த சிரமதானத்தில் பெருமளவிலான மக்கள் கலந்து கொண்டனா.

இறம்பைக்குளம் நகரத்திற்கு அண்மையில் உள்ள பிரதேசமாகும். பொதுமக்களுக்கு பல வகையிலும் உதவிகளை வழங்கும் நோக்குடன் மேற்கொள்ளப்படும் பொலில் - பொது மக்கள் நல்லுறவுப் பகுதியினரின் செயற்பாடுகளைப் பலரும் வரவேற்றுள்ளனர்.(39)

# பனையிலிருந்து பெறப்படும் மூலப்பொருட்களை பயன்படுத்தி உள்ளூர் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்

## பனை அபிவிருத்திச்சபைத் தலைவர்



(கிளிநொச்சி)

பள்ளக்கமம் பிரதேசம் பனைவளத்தினை மூலவளமாகக் கொண்டுள்ளது. ஆகையால் இவ்வளம் தொடர்பான பயிற்சி இவ்விடத்திற்கு இன்றியமையாத ஒன்றாகும். எனவே இப்பயிற்சியினை முழுமையாகப் பெற்று சிறந்த உற்பத்தியாளர்களாக உருவாக முடியும். எவர் ஒருவர் உழைக்கின்றாரோ அவர் அவ் உழைப்பின் பயனை அடைய வேண்டும் என பனை அபிவிருத்தி சபைத்தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

மன்னார் மாவடடத்தின் பள்ளக்கமம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பனையோலைக் கைப்பணிப் பயிற்சித் தொடக்க விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்:

ஒவ்வொருவரும சபையில் உறபததியாளர்களுக்கென ஆரம்பிககப்பட்டுள்ள "சிறுசுவடுகள்" அமைப்பில் அங்கத்தவர் களாக இணைந்து அதன் சலுகைகளைப் பெற்று, உங்களின் வளம்சார்ந்த சுயபொருளாதாரத்தை மேம்படுத்துங்கள். அண்மையில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களிலும் சிறுசுவடுகள் அங்கத்தவர்களுக்கு வெள்ள அனர்த்த நிவாரண நிதியாக ரூபா 281,000 எம்மால் வழங்கப்பட்டது. இச் செயற்பாடானது பனை அபிவிருத்திச் சபையின் வரலாற்றில் உற்பத்தியாளர்களுக்கு முதன்முதலாக வழங்கப்பட்ட காலத்தின் தேவைச் சலுகையாகும். இச்செயற்பாட்டிற்கு அனுமதி வழங்கி வழிகாட்டிய பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு நன்றியினைத் தெரிவிக்கின்றேன். மேலும் பனை தறித்தல் ஊடாக மீள் நடுகை நிதியம் போல் சிறுசுவடுகள் மகளிர் நிதியம் ஆரம்பிக்கப்பட்டு அதில் உற்பத்தியாளர்கள் ஒவ்வொருவராலும் வழங்கப்படும் உற்பத்திப் பெறுமதியின் இலாபத்தின் பத்து வீதம் வருடாவருடம் இலாபப் பகிர்வாக வழங்கப்படும் திட்டம் என்னால் முன்வைக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும். எனவே எமது வளத்தினூடாக உங்களை வளப்படுத்துங்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பனை அபிவிருத்திச் சபையின் விரிவாக்கல் உத்தியோகத்தர் கா.கோபாலகிருஷ்ணன், மன்னார் மாவட்ட இணைப்பாளர் மா.ஸ்ரீதரன், அப்பகுதி கிராம அலுவலர் மற்றும் பெண்கள் ஆகியோர் கலந்து கொணடனர்.


# இவ்வாரம் முதல் குமுதினி சேவையில்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுக்கும் குறிகட்டுவானுக்கும் இடையிலான குமுதினி படகின் சேவை இந்த வாரத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

படகின் கிளச் பொக்ஸ் பழுதடைந்ததால் அதன் சேவைகள் திடீரென பாதிக்கப்பட்டிருந்தது.


தற்போது புதிய கிளச் பொக்ஸ் போடப்பட்டு சீர்ப்படுத்தப்பட்டுள்ளதால் அதன் சேவை இந்த வாரத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது. (வி)



வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலையில் நேற்று நடைபெற்ற க்ரியாவின் தமிழ் அகராதி நூல் விநியோக விழாவில் நூலை வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி மற்றும் ஆளுநரின் செயலாளர் ரங்கராஜன் ஆகியோர் பாடசாலை அதிபர்களுக்கு வழங்குவதையும் இந்நிகழ்வில் கலந்துகொண்டோரையும் காணலாம் படம்: மிதுலன்

# சமூக கலாசார சீரழிவுகளை ஒழிப்பதற்கு மாதர்கிராம அபிவிருத்திச் சங்கங்கள் முன்வரவேண்டும்

## ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

சமூகத்தில் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படுகின்ற அநீதிகளையும், பெண்களால் ஏற்படுத்தப்படுகின்ற தவறுகளையும் சமூகத்திலிருந்து களைவதற்கு மாதர் அபிவிருத்திச் சங்கங்கள் பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின்(உதயன்) அவர்கள் தெரிவித்துள்ளார்.

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியில் நேற்றுமுன்தினம் (26.03.2011) மாலை 3 மணியளவில் நடைபெற்ற சமூக முன்னெடுத்தல் குழுவின் ஈராண்டு நிறைவும்,மகளிர் தினவிழாவிலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் நாங்கள் பெண்களின் உரிமைகள் சம்பந்தமாகப் பேசியதும், போராடியதும், பெண்களாகத் திரண்டு கோரிக்கைகளை முன்வைத்துச் செயற்பட்டதன் மூலம் அவர்களுக்கான உரிமைகள் கிடைக்கப் பெற்றதும் உங்களுக்குத் தெரியும். ஆனால் இன்று அவ்வாறு கிடைத்த உரிமைகளை எவ்வாறு பாதுகாத்துக்கொள்கின்றோம் என்பதே பிரதானமானது. எனவே சமூகத்தில் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படுகின்ற அநீதிகளையும், பெண்களால் ஏற்படுத்தப்படுகின்ற தவறுகளையும் சமூகத்திலிருந்து களைவதற்கு மாதர் அபிவிருத்திச் சங்கங்கள் பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இதனுடன் மாதர் சங்கங்கள் தொடர்ந்தும் பெண்களுக்கான சேவைகளை மேற்கொள்ள வேண்டும். இதற்காக எமது ஒத்துழைப்பு என்றும் இருக்கும் என்றும் தெரிவித்தார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) உரையாற்றும் போது, சமூகத்தில் பெண்களுக்கு எதிராக இரண்டு வகையான பிரச்சினைகள் ஏற்படுத்தப்படுகின்றன. ஒன்றுசமூகத்தில் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படுகின்ற அநீதிகள் மற்றையது பெண்களால் இழைக்கப்படுகின்ற தவறுகள். இன்று யாழ்.குடாநாட்டில் சிசுக்கொலைகள் அதிகரித்துச் செல்கின்றன. இவ்வாறான சமூக சீர்கேடுகள் இல்லாதொழிக்கப்ப - வேண்டும். நாங்கள் இன்று மக்களுடன் மக்களாக நின்று சேவை செய்கின்ற போதும் சில தனி மனிதர்கள் விடுகின்ற தவறுகளை எமது கட்சியுடன் சம்பந்தப்படுத்தி சேறுபூசும் நடவடிக்கையினை சில ஊடகங்கள் மேற்கொள்கின்றன. ஆனால் நாம் மக்களுக்கான பணிகளை திறம்படத் தொடர்ந்தும் மேற்கொள்வோம் என்றும் தெரிவித்தார்.

மாதர் அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திருமதி லூயிஸ் மன்ரேசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தென்மராட்சி பிரதேச அமைப்பாளர் வலன்டைன் ஈ.பி.டி.பி. சிரேஸ்ட உறுப்பினர் சாள்ஸ், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினைச் சேர்ந்த விஸ்வா மற்றும் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், மக்கள் வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் கந்தையா சண்முகலிங்கம், கெயர் நிறுவன பிரதித் திட்டப் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் சமூக முன்னெடுத்தல் குழுவின் சிறந்த செயற்பாடுகளை மேற்கொண்ட அங்கத்தவர்களுக்கு பரிசில்கள் விருந்தினர்களால் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (69)

# பாடசாலை திறப்புவிழா

(பருத்தித்துறை)

வடமராட்சியிலுள்ள குடத்தனை கரையூர் றோ.க.பாடசாலையின் திறப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கடந்த 2004 ஆம் ஆண்டு இடம் பெற்ற சுனாமி அனர்த்தத்தினால் சேதமடைந்த இப்பாடசாலையை மீளவும் கட்டியெழுப்புவதற்கு கல்வி அமைச்சு றொட்றிக் கழகத்துடன் ஒப்பந்தம் செய்ததாகவும் குறித்த ஆண்டுமுதல் கட்டட வேலைகள் இடம்பெற்று வந்த போதிலும் பின்னர் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையினால் பணிகள் ஸ்தம்பிதமடைந்தது.

இதன்பின்னர் யாழ்.மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் கே.கணேஷ் இது தொடர்பாக சுட்டிக்காட்டியதுடன் பாடசாலை கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனத் தெரிவித்ததை அடுத்து வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா றொட்டறிக் கழகத்துடன் தொடர்பு கொண்டு மீள் கட்டுமானப்பணிகளை ஆரம்பிக்குமாறு கேட்டுக்கொண்டதற் கிணங்க சர்வதேச றொட்டறிக் கழக நிதி அனுசரணையில் இப் பாடசாலையை மீள அமைத்துக் கொடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிகழ்வில் சர்வதேச றொட்டறிக் கழக ஆளுநர் இப்பாடசாலையை வைபரீதியாகத் திறந்து வைக்கவுள்ளார்.

இந்நிகழ்விற்கு சகல பாடசாலை அதிபர்கள்,கோட்டக்கல்வி அதிகாரிகள், கல்வி அதிகாரிகள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (109)

# சிங்களப் பாடசாலை மீண்டும் ஆரம்பம்

(வடமராட்சி)

கிளிநொச்சியில் மீண்டும் சிங்களப் பாடசாலைகளை இயங்க வைக்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சியில் யுத்தம் இடம்பெற்ற காலங்களுக்கு முன்னர் சிங்களப் பாடசாலை செயற்பட்டது. தற்போது இப் பாட்சாலை மீண்டும் செயற்படுத்தப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சியில் தற்போது இயங்கி வரும் கல்வித்திணைக்களம் இப்பாடசாலைக் கட்டடத்திலே அமைந்துள்ளது. எனினும் இக்கல்வித் திணைக்களத்தினை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (100)

# வெளிச்சமின்றி செல்வோர் மீது நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இரவில் சைக்கிள்களில் பயணம் செய்வோர் அதற்கான ஒளி வசதியை ஏற்படுத்த வேண்டும் எனப் பொலிசார் தெரிவித்துள்ளார்.

சைக்கிள்களில் டைனமோக்களைப் பயன்படுத்தி ஒளிவசதியை ஏற்படுத்தியே பயணம் செய்யவேண்டும். அவ்வாறு செயற்படாதோர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை வீதிகள் மின்சார விளக்குகள் இன்மையால் இருளில் மூழ்கியுள்ளன.

இதனால் சைக்கிள்களில் பயணம் செய்யும் மக்கள் சிரமப்பட்டும் வருகின்றனர். (வி)

# தையற்பயிற்சி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம் தமது எல்லைக்குட்பட்ட மகளிருக்கான நவீன தையல் பயிற்சி வழங்குவதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

பயிச்சி பெறவிரும்புவோர் தமது சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்தை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னராக சங்கச் செயலாளர் திருமதி.ம.கீர்த்திநாதனிடம் அல்லது புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தில் ஒப்படைக்கும் படி சங்கத்தலைவி திருமதி லோ.நவரட்ணம் அறிவித்துள்ளார். (11)

## ஆதினியின் இன்றைய பலன்

(28.03.2011 – திங்கட்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

விகிர்தி பங்குனி 14

இராகுகாலம் 7.44–9.14, சுபநேரம் 12.14 –1.44

நவமி மு.ப.11.34 உத்தராடம்,மரணயோகம் பி.இ. 4.03, இரண்டாம் பங்குனித் திங்கள்

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:–** நினைத்தவை சாதித்தல், நண்பர்சேர்க்கை,போட்டிகளில் வெற்றி.

**ரிஷபம்:–**பெரியோர் உதவி,நற்செய்தி, பணவரவு.

**மிதுனம் :–** பணஉதவிகிடைத்தல்,காரியசித்தி,குடும்பத்தில் மகிழ்ச்சி.

**கடகம்:–** மகிழ்ச்சிப் பெருக்கு.காரிய சித்தி,பாராட்டு.

**சிம்மம்:–** காரியத்தடை,நட்டம், விதண்டாவாதம்.

**கன்னி :–**தொழிலால் லாபம்,முயற்சி பலிதம்,அன்பர் உதவி.

**துலாம் :–** பாராட்டப்படல்,மேலாளர் உதவி,மனைவி வழியால் உதவி.

**விருச்சிகம்:–** காரியசித்தி,சுபச்செலவு பொருட்சேர்க்கை.

**தனுசு:–** மனக் கலக்கம்,காரியத் தடை,கீழானநிலை.

**மகரம்:–** பகைவர்நேசம்,நினைத்த காரியச்சித்தி,பணவரவு.

**கும்பம் :–** பொறாமைப்படல்,அதிகபிரயாசை, தடங்கல்.

**மீனம்:–** வாகன நஷ்டம்,அரசபயம், தீயோர் நட்பு.

# புதுக்குடியிருப்பு பாடசாலைகளுக்கிடையிலான கோட்டமட்ட தமிழ்த் தினப்போட்டி முடிவுகள்

(கிளிநொச்சி )

முல்லைத்தீவு கல்வி வலய புதுக்குடியிருப்பு கோட்டத்தின் உபகோட்டமட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள் விபரம் வருமாறு,

இசையும் அசைவும் பிரிவு - 01

கு.கேமா - தேராவில் தமிழ் வித்தி, அ.தமிழினி - நெத்தலியாறு ம.வி, உ.சங்கீதா - விசுவமடு மகாவித்தியாலயம்.

பேச்சு பிரிவு - 01

மா.றொசானி - நெத்தலியாறு மகாவித்தி, ச.கயல்விழி - மு/தேராவில் தமிழ் வித்தி, ஜெ.தர்சனா - பாரதி வித்தியாலயம்.

பிரிவு - 2 க.பிரவின் - பாரதி வித்தியாலயம்,து.சஞ்சீவ் கிருஷ்ணா - விசுவமடு வித்தியாலயம்,ய.யசோதிகா - தேராவில் தமிழ் வித்தி,

பிரிவு - 03

இ.தனுசோபன் - விசுவமடு மகாவித்தி,இ.தீர்த்தனா - பாரதி வித்தி,இ.கெவின் - தேராவில் தமிழ் வித்தி,

பிரிவு - 04

சு.தேவநிசாந்தினி - விசுவமடு ம.வி,இ.அகல்யா - பாரதி வித்தி,

இசைதனி-பிரிவு II யோ.கோபிகா - விசுவமடு ம.வி,

பிரிவு - III உ.கயல்விழி விசுவமடு ம.வி.,அ.ரூபினி - பாரதி வித்தியாலயம்.

கட்டுரை பிரிவு III ஜெ.லலிசா - விசுவமடு ம.வி,செ.துசித்தா - பாரதி ம.வி,சசிக்குமார் - தேராவில் தமிழ் வித்தி.

பிரிவு - IV மா.தமிழ்வாணி - பாரதி வித்தியாலயம், கு.ஆனந்தி - தேராவில் தமிழ் வித்தி,நா.மதுஷன் - விசுவமடு ம.வி.

ஆக்கம் எழுத்து - பிரிவு I

கை.சானுகா - விசுவமடு ம.வி, வி.திசானி - பாரதி வித்தியாலயம்,கு.விஜயா - தேராவில் தமிழ் வித்தியாலயம்.

வாசிப்பு பிரிவு - I

கி.விதுர்சியா - விசுவமடு ம.வி, கு.குணசறிலா - நெத்தலியாறு ம.வி, இ.மிதுஷன் - பாரதி வித்தியாலயம்,

பாவோதல் பிரிவு - I

பி.கேனுஷா பாரதி வித்தியாலயம், க.கயல்விழி - தேராவில் தமிழ் வித்தியாலயம்,

பிரிவு - II சி.கீர்த்திகா - பாரதி வித்தியாலயம்,மு.சஜிதா - விசுவமடு ம.வி,பெ.தனுசன் - தேராவில் தமிழ் வித்தியாலயம்.

பிரிவு III தி.அஜந்தன் - பாரதி வித்தியாலயம்,ச.சாம்பவி - விசுவமடு ம.வி,சி.சுதாமினி - தேராவில் தமிழ் வித்தி.

இசை தனி பிரிவு III

த.கிருசாந்தினி - விசுவமடு மகாவித்தியாலயம்,

பிரிவு - IV த.மதுஷா - பாரதி வித்தி. சூ.கோபிகிருஷ்ணா - விசுவமடு ம.வி.

தனிநடனம் பிரிவு II பி.பிரியதர்சினி பாரதி வித்தி,

பிரிவு III த.தேனியா - பாரதி வித்தியாலயம்,

சிறுகதை ஆக்கம் - க.அபிதா விசுவமடு ம.வித்தி,ஜெ.தர்சினி - பாரதி வித்தியாலயம்.

இலக்கணம் பிரிவு IV - சி.உபேஸ் - விசுவமடு ம.வி

பிரிவு V - ச.மோகனேஸ்வரி - பாரதி வித்தி

கவிதை ஆக்கம் பிரிவு - V ச.முகுந்தினி - பாரதி வித்தி,

திறனாய்வு பிரிவு ஏ - கு.திருமகள் விசுவமடு ம.வி

இலக்கியநயம் - சு.சதீஸ்குமார் விசுவமடு.ம.வி

ப.நிதர்சன் - பாரதி வித்தியாலயம்.

தமிழ் கட்டுரை - தே.நிதர்சினி பாரதி வித்தியாலயம்

ந.திவாகரன் - விசுவமடு ம.வி. (17)

# லிபியாவிற்கு எதிரான தாக்குதல் பின்வாங்கியது அமெரிக்க அரசு


(வொஷிங்டன்)

**லிபியாவிற்கெதிரான போர் நடவடிக்கை முற்றுப் பெற்றுள் ளது. அதில் இருந்து நாங்கள் விலகிக் கொள்கின்றோம் என்று அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா அறிவித்துள்ளார்.**

சாகசப் பயணம் எனும் பெயரில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் லிபியா விற்கெதிரான வான் தாக்குதல்களில் ஈடுபட்டு வந்த நிலையில் நேற்றைய தினம் அமெரிக்கா அதிலிருந்து விலகிக் கொள்வதாகத் திடீரென்று அறிவித் துள்ளது.

நடைபெறவிருந்த மாபெரும் மனித சங்காரத்தை நாங்கள் தடுத்து நிறுத்தி னோம் என்று குறிப்பிட்டுள்ள பராக் ஒபாமா சிவிலியன்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களின் உயிர்களை நாங்கள் பாதுகாத்துள்ளோம் என்றும் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அந்த வகையில் அமெரிக்காவின் எதிர் பார்ப்பின் பிரகாரம் நாங்கள் லிபியாவில்




வெற்றிகரமான முறையில் வான் பறப்பு தடை வலயத்தை அமுல்படுத்துவதில் வெற்றி கண்டுள்ளோம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இப்பிரச்சினையில் தொடர்ந்தும் அமெரிக்காவின் பங்களிப்பை வழங்கிக் கொண்டிருப்பது முடியாத காரியம் என்று பராக் ஒபாமா குறிப்பிட்டுள்ளார். ஆயி னும் கடாபி போன்ற இரத்த வெறி கொண்டு பொதுமக்களைப் படுகொலை செய்பவர்களுக்கு எதிராக உலக மக்கள் ஒன்று திரண்டு அதற்கெதிரான நட வடிக்கைகளை மேற்கொள்ளும் போது அதில் நாங்களும் இணைந்து கொள்ள வேண்டும் என்று எங்கள் நாட்டு மக்களும் மனப்பூர்வமாக ஆதரவளித்தால் மட்டும் எதிர்காலத்தில் அவ்வாறான நடவடிக் கையில் பங்கு பற்றுவது குறித்து ஆலோசிக்கப்படும் என்றும் வலியுறுத்தி யுள்ளார்.

அமெரிக்காவின் பொருளாதார நிலைமை சீர்குலைந்துள்ள நிலையில் லிபிய யுத்தத்திற்கென ஏராளம் பணத்தை வாரியிறைக்க அங்குள்ள மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கின்ற னர். தங்களுடைய வரிப்பணம் வீணடிக் கப்படுவதாக அவர்கள் குற்றம் சாட்டு கின்றனர்.

இவ்வாறு பொதுமக்கள் காட்டும் கடும் எதிர்ப்பின் காரணமாகவே லிபியா விற்கெதிரான நடவடிக்கையிலிருந்து அமெரிக்கா ஒதுங்கிக் கொள்ளத் தீர் மானித்திருப்பதாக இத்தாலியின் அன்ஸா ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

## பசுபிக் பிராந்தியமூடாக நகரும் ஜப்பானிய கதிர்வீச்சு மேகங்கள்



(டோக்கியோ)

ஜப்பானிய அணு உலைகளிலிருந்து வெளியான கதிர்வீச்சின் தாக்கத்துக் குட்பட்ட மேகங்கள் தற்போது பசுபிக் பிராந்தியத்தினூடாக நகர்ந்து கொண்டி ருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

அதன் காரணமாக தென்னாசிய நாடு கள் உள்ளிட்ட ஆசிய நாடுகளுக்கான அச்சுறுத்தல் நிலை பெருமளவில் நீங்கியுள்ளது.

ஆயினும் மேற்கத்திய நாடுகள் மற்றும் அவுஸ்ரேலியாவிற்கான அச்சு றுத்தல் குறித்து இன்னும் எதிர்வு கூற முடியாத நிலையே காணப்படுகின்றது.

இதற்கிடையே அணுக் கதிர்வீச்சு கார ணமாக குறைந்தது இன்னும் ஓராண்டு காலம் வரை ஜப்பான் தனது உணவுப் பொருள் ஏற்றுமதியை இடைநிறுத்தி வைக்கத் தீர்மானித்துள்ளதாக அறிவித் துள்ளது.

## போர் நிறுத்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டது லிபிய அரசு

லிபியாவில் நிலவும் கிளர்ச்சியை முடி வுக்குக் கொண்டு வரும் வகையில் ஆபிரிக்க ஒன்றியம் விதித்திருந்த ஐந்து நிபந்தனைகளை லிபியா ஏற்றுக்கொண் டுள்ளது.

ஆபிரிக்க ஒன்றியம் முன்வைத் துள்ள நிபந்தனைகள் தொடர்பில் எது வித பேரம் பேசுதல்களும் இல்லாமல் அவற்றை ஏற்றுக் கொள்வதாக லிபிய அதிகாரிகள் அறிவித்துள்ளனர் என்று பன்னாட்டுச் செய்தி நிறுவனங்களுக்கு ஆபிரிக்க ஒன்றியத்தின் செய்தித் தொடர் பாளர் அறிவித்துள்ளார்.

லிபியாவில் உடனடிப் போர்நிறுத்த மொன்றை அமுல்படுத்துவது தொடர்



பான நடவடிக்கைகளை தமது ஒன்றியம் மேற்கொண்டு வருவதாகவும் ஆபிரிக்க ஒன்றியத்தின் தலைவர் ஜீன் பீங்க் தெரி வித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் கடாபிக்கு நெருக் கமான அதிகாரிகளும் உறுதிப்படுத்தி யுள்ளனர். ஆபிரிக்க ஒன்றியத்தின் தலை யீட்டின் மூலம் லிபியாவில் பொதுமக் களின் இரத்தம் சிந்தப்படுவதைத் தடுக்க தாம் தயாராக இருப்பதாக அவர்கள் அறிவித்துள்ளனர்.




## செவ்வாய்க்கு கமரா அனுப்பும் திட்டத்தை கைவிட்டது நாஸா

(வொஷிங்டன்)

செவ்வாய் கிரகத்துக்கு 3 டி கம ராவை அனுப்பி ஆய்வு செய்யும் திட் டத்தை அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா ரத்துச் செய்துள்ளது.

முன்னதாக செவ்வாய்க்கு அனுப்பு வதற்காக அவதார் திரைப்படத்தை இயக்கிய பிரபல இயக்குநர் டேவிட் கேமரூனின் உதவியுடன் அதிக திறனுள்ள இந்த 3 டி கேமராவை உரு வாக்க நாசா திட்டமிட்டிருந்தது. போது மான கால அவகாசம் இல்லாததால் 3 டி கேமரா அனுப்பும் திட்டத்தை கைவிடுவதாக நாசா அறிவித்துள்ளது.

இந்த ஆண்டு செவ்வாய்க்குப் புறப்படும் நாசாவின் விண்கலம் 2012 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் செவ்வாய் கிரகத்தில் தரையிறங்கும் என்று நாசா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பூமியைப் போன்று செவ்வாய்க் கிர கத்தின் துருவங்களில் பனி படர்ந் துள்ளது. ஏற்கெனவே சில விண் கலங்கள் செவ்வாயில் தரை இறங்கி ஆய்வு நடத்தியுள்ளன.

### கலைக்கப்பட்டது

கனேடிய நாடாளுமன்றம் ஆளுநர் நாயகம் டவிட் ஜோன்ஸ்டனினால் நேற்று முன்தினம் கலைக்கப்பட்டுள் ளது. ஸ்டீபன் ஹார்பர் தலைமை யிலான அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையில்லா வாக்கெடுப்பின் பின்னர் இந்நாடாளுமன்றம் கலைக்கப் பட்டது. இதனால் மே 2ஆம் திகதி அங்கு பொதுத் தேர்தல் நடைபெற வுள்ளது. கடந்த 7 வருட காலத்தில் நடைபெறவுள்ள 4ஆவது பொதுத் தேர்தல் இதுவாகும்.

## அணுமின் நிலைய கதிர்வீச்சைத் தடுக்க 700 பொறியியலாளர்கள் தீவிர முயற்சி

(டோக்கியோ)

ஜப்பானில் நிலநடுக்கம் காரணமாக, அணு மின் நிலையத்தில் இருந்து வெளியேறும் கதிர் வீச்சைத் தடுக்கும் முயற்சியில், 700 பொறியி லாளர்கள் இரவு பகலாகப் போராடி வரு கின்றனர்.

கதிர்வீச்சைத் தடுப்பதற்காக, ஏராளமான தண்ணீரை ஏற்றிக் கொண்டு, அமெரிக்க கடற் படைக் கப்பல் ஒன்றும் ஜப்பானுக்கு விரைந் துள்ளது.

ஜப்பானில் கடந்த 11ம் தேதி ஏற்பட்ட நில நடுக்கம் மற்றும் சுனாமி காரணமாக, புகுஷிமா அணுமின் நிலையத்தில் இருந்த, அணு உலை களில் வெடிப்பு ஏற்பட்டது. அதிலிருந்து வெளி யேறும் கதிர்வீச்சு, ஜப்பானின் மற்ற பகுதி களுக்கு வேகமாகப் பரவுகிறது.

அங்குள்ள உணவுப் பொருட்கள், தண்ணீர் ஆகிய வற்றைக்கூடப் பயன்படுத்த முடியாத நெருக்க டிக்கு ஜப்பான் மக்கள் ஆளாகியுள்ளனர். இந் நிலையில், புகுஷிமா அணு உலையில் இருந்து வெளியேறும் கதிர்வீச்சின் அளவைக் கட்டுப்படுத் துவதற்காக, கடல் நீரை அணு உலைகளில் பீய்ச்சி அடிக்கும் முயற்சியில் மீட்புக் குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களின் முயற்சிக்கு எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. கடல் நீரில் உள்ள உவர்ப்புத் தன்மையே இதற்குக் காரணம். இதைத் தொட ர்ந்து, ஏராளமான தண்ணீருடன் அமெரிக்க கடற் படைக் கப்பல் ஒன்று, ஜப்பானுக்கு விரைந் துள்ளது.

இந்தக் கப்பலில் உள்ள தண்ணீரை, அணு உலைகள் மீது பீய்ச்சி அடித்தால், ஓரளவுக்கு கதிர் வீச்சு கட்டுப்படுத்தப்படும் என, கூறப்படுகிறது. இதற்கிடையே, புகுஷிமா அணுமின் நிலையத் தில் உள்ள மேலும் ஒரு அணு உலை ஆபத் தான நிலையில் இருப்பதாகவும், அந்த உலை யில் எப்போது வேண்டுமானாலும் வெடிப்பு ஏற்பட லாம் என்றும் ஜப்பான் அதிகாரிகள் எச்சரித் துள்ளனர். இதுகுறித்து ஜப்பான் அமைச்சரவை தலைமை செயலர் யுகியோ எடனோ கூறுகை யில், அணு உலைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்பால், மிகவும் மோசமான நிலை எதுவும் ஏற்பட வில்லை.

இருந்தாலும், இதை தீவிரமாக கண்காணித்து வருகிறோம். கதிர்வீச்சைத் தடுக்கும் முயற்சியில், 700க்கும் மேற்பட்ட இன்ஜினியர்கள் இரவு பகலாகப் போராடி வருகின்றனர்.

புகுஷிமாவில் மொத்தம் உள்ள ஆறு உலை களில், இரண்டு உலைகள் பாதுகாப்பாக உள் ளன. மற்ற நான்கு அணு உலைகளின் நிலை சற்று மோசமாக உள்ளது என்றார்.


## சரியான விடைகளை அனுப்பி பரிசில்களை அள்ளுங்கள்

எதிர்வரும் 2ஆம் திகதி நடைபெறவுள்ள உலகக் கிண்ண இறுதிப் போட்டி தொடர்பாகக் கேட்கப்படும் வினாக்களுக்கு சரியான விடைகளை அனுப்பிபெறுமதியான பரிசில்களை அள்ளுங்கள்.

1) உலகக் கிண்ணத்தை வெல்லப்போகும் அணி எது?

2) இப்போட்டித்தொடரில், தொடர்நாயகன் விருதைப் பெறும் வீரர் யார்?

ICC Cricket World Cup 2011

பெயர்: ..........................................

முகவரி : ..........................................

விடைகள் : 01) ..........................................

02) ..........................................


உங்கள் விடைகளை பின்வரும் விலாசங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளிலும் இடலாம்.

தினமுரசு காரியாலயம்
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

தினமுரசு விளம்பரப்பணிமனை
M.P.C.S. கட்டடம்
127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

விடைகளை 01 ஆம் திகதக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவையுங்கள்.

# அக்தருக்கு வழங்குங்கள் வாய்ப்பு



(கராச்சி)

இந்தியாவுக்கு எதிரான அரையிறுதியில் விளையாட, வேகப்பந்துவீச்சாளர் அக்தருக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என முன்னாள் பாகிஸ்தான் தலைவர் வசிம் அக்ரம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியாவுக்கு எதிரான அரையிறுதியில், வேகப்பந்துவீச்சாளர் அக்தர் கட்டாயம் விளையாட வேண்டும். வகாப் ரியாஸ் சிறப்பாகப் பந்துவீசி வருகிறார். இருப்பினும், இப்போட்டியில் அக்தருக்கு முன்னுரிமை அளித்து, விளையாடும் இறுதி 11 பேர் அணியில் தேர்வு செய்ய வேண்டும். ஏனெனில் இவர், இந்தியாவுக்கு எதிராக சிறப்பாக பந்துவீசக் கூடியவர். சச்சின், சேவாக் உள்ளிட்ட ஆரம்ப ஜோடியை எளிதாக சமாளிக்கக் கூடிய திறமை இவரிடம் உள்ளது.

இப்போட்டியில் இந்திய அணிக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் இருப்பதாகத் தெரிகிறது. இருப்பினும் இத்தொடரில் பாகிஸ்தான் வீரர்களின் செயற்பாடு திருப்தி அளிக்கிறது. பந்துவீச்சு சிறப்பாக இருப்பதால், பாகிஸ்தான் அணிக்கும் வெற்றி வாய்ப்பு உள்ளது.

இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோதும் போட்டி என்றாலே ஒருவித எதிர்பார்ப்பு அனைவரிடமும் இருக்கத்தான் செய்யும். ரசிகர்களே இல்லாத மைதானத்தில் விளையாடினால் கூட, இவ்விரு அணிகளுக்கும் இடையிலான போட்டியின் சுவாரஸ்யத்திற்கு பஞ்சம் இருக்காது என்றார்.

# சரியாக கலக்கப்பட்டுள்ளதால் கிண்ணத்தை வெல்ல வாய்ப்பு



(லாகூர்)

சமீப காலங்களில் வீரர்களின் ஆட்டத்திறன், செய்துள்ள சாதனைகளை வைத்துப் பார்க்கும் போது, இந்திய அணி ஒரு சரியான கலவையாக இருக்கிறது. உலகக் கிண்ணத்தை வெல்ல அவர்களுக்கு இது ஒரு அரிய வாய்ப்பு என பாகிஸ்தான் முன்னாள் தலைவர் இம்ரான்கான் தெரிவித்தார்.

உலகக் கிண்ணத்தைப் பொறுத்தவரை கணிக்கப்படும் அணிகள் எப்போதுமே ஜெயிப்பதில்லை. அது போல போட்டியை நடத்தும் அணிகள் இது வரை உலகக் கிண்ணத்தை வென்றதில்லை. அரையிறுதியில் பாகிஸ்தான் வெல்ல வேண்டும் என்று விரும்புகிறேன். இருந்தாலும் கூட கிண்ணத்தை கைப்பற்ற இந்தியாவுக்கும் நல்ல வாய்ப்பு உள்ளது.

அடுத்த உலகக் கிண்ணத் தொடரில் இது போன்ற வாய்ப்பு வராமல் போகலாம். மூன்று வடிவிலான கிரிக்கெட் போட்டிக்கும் தலைவராக இருந்தவர் என்ற முறையில் இந்த ஆட்டம் இந்திய அணித் தலைவர் டோனிக்கு சாதகமாக இருக்க வாய்ப்புகள் அதிகம். பாகிஸ்தான் தலைவர் அப்ரிடியைப் பொறுத்த அளவில் அவர் டெஸ்ட் தலைவராக இருக்க விரும்பவில்லை. மற்றப் போட்டிகளில் உள்ள நெருக்கடியைக் காட்டிலும் டெஸ்ட் அணியில் உள்ள நெருக்கடி தான் அதிகம் என்று கூறியிருந்தார். டெஸ்ட் போட்டிகளில் தலைவராக இல்லாத நிலையில், ஒரு நாள் போட்டிகளில் உள்ள நெருக்கடியைச் சமாளிப்பது கடினம். எனவே அப்ரிடியுடன் ஒப்பிடும் போது டோனிக்கு சாதகமான அம்சங்கள் கூடுதலாக உள்ளன என்றார்.

# யாருக்கு ஆதரவு



இந்தியாவின் ரென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா பாகிஸ்தான் மருமகள் என்பதால் இந்தியா-பாகிஸ்தான் இடையிலான உலகக் கிண்ணக் கிரிக்கெட் அரையிறுதியில் அவரது ஆதரவு யாருக்கு இருக்கும்? என்ற எதிர்பார்ப்பு நிலவியது. இதற்கு சானியா பதிலளித்துள்ளார்.

டுவிட்டர் இணையதளத்தில், அவர் குறிப்பிட்டுள்ளதாவது: எனது ஆதரவு எப்போதும் இந்தியாவுக்குத் தான். மாலிக் பாகிஸ்தானை ஆதரிப்பார். இது வழக்கமான ஒன்று தான். எங்களுக்குள் இந்த யுத்தம் தொடர்ந்து கொண்டிருக்கும். கடந்த முறை இவ்விரு அணிகளும் மொகாலியில் விளையாடிய போது நேரில் பார்த்து ரசித்தேன். இப்போது உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதியில் மோத இருக்கிறார்கள். இதனையும் நேரில் பார்க்க விரும்புகிறேன் என்றுள்ளது.

# இந்திய-பாகிஸ்தான் போட்டிக்கு உச்சக்கட்ட பாதுகாப்பு அளிப்பு



(மொகாலி)

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது அரை இறுதி ஆட்டம் மொகாலியில் வருகிற 30ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில் இந்தியா-பாகிஸ்தான் அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன. உலகம் முழுவதும் இந்தப் போட்டிக்கு அதிக எதிர்பார்ப்பு இருக்கிறது.

பிரதமர் மன்மோகன்சிங், பாகிஸ்தான் பிரதமர் கிலானி உட்பட முக்கிய பிரமுகர்கள் இந்தப் போட்டியைப் பார்க்கிறார்கள். இதன் காரணமாக இந்தப் போட்டிக்குப் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மும்பையில் 2008ஆம் ஆண்டு பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல் சம்பவத்துக்கு பின்னர் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் முதல் முறையாக மோதுகின்றன. இதனால் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்பு படை பொலிசார் 3 ஆயிரம் பேர் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இந்தியா, பாகிஸ்தான் வீரர்கள் தங்கியுள்ள தாஜ் விடுதி முன்பு ஆயிரம் பொலிசார் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டுள்ளனர். வீரர்கள் செல்லும் இடங்களுக்கு ஆயுதம் தாங்கிய சிறப்புப் படையினர் உடன் செல்கின்றனர். போட்டி நடைபெறும் மொகாலி மைதானத்தில் 30 ஆயிரம் ரசிகர்கள் அமரலாம். அதற்கு ஏற்றவாறு பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# தோல்வியிலிருந்து மீள்வோம்



உலகக் கிண்ண காலிறுதிப் போட்டியில் அடைந்த தோல்வியில் இருந்து மீள்வோம் என தென்னாபிரிக்க வீரர் ஸ்மித் கூறினார்.

ஒருநாள் அணியின் தலைவர் பதவியில் இருந்து விலகியதைத் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு ஸ்மித் கூறினார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: இத்தொடருக்காக அனைத்து வீரர்களும் கடினமான பயிற்சி செய்து நல்ல திறமையுடன் வந்திருந்தோம். இருப்பினும் மீண்டு வருவது என்பது கடினமாகி விட்டது. இத்தொடரில் சிறப்பான ஆட்டத்தைத் தான் வெளிப்படுத்தினோம். இதில் தவறு இருப்பதாகத் தெரியவில்லை. அடுத்து எதிர்காலத்தில் அனைத்துப் பிரிவிலும் அசத்திக் கிண்ணத்தை வெல்வோம் என்ற நம்பிக்கை உள்ளது என அவர் கூறினார்.

# புதிய ஆதிக்கம்

அவுஸ்ரேலியாவை உலகக் கிண்ணத் தொடரின் காலிறுதியில் டோனியின் தலைமையிலான இந்திய அணி வீழ்த்தியமையானது கிரிக்கெட்டில் இந்தியாவின் புதிய ஆதிக்கத்தை அறிவிப்பதாக உள்ளது என்று அவுஸ்ரேலிய ஊடகங்கள் புகழாரம் சூட்டியுள்ளன.

"தோல்வியில் நாணம் இல்லை, ஆதிக்கத்தில் மாற்றம்" என்ற தலைப்பில் சிட்னி மார்னிங் ஹெரால்ட் பத்திரிக்கை தலைப்பிட்டு எழுதியுள்ள பத்தியில் வரும் ஆண்டுகளில் அவுஸ்ரேலியாவின் ஆதிக்கத்தை இந்தியா செயற்படுத்தும் என்று கருத்துத் தெரிவித்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி இந்திய அணி போல் சரியான துவக்கம் இல்லாமல், ஆனால் சில தனி நபர் துடுப்பாட்டம் போல் இருந்தது. மாறாக இந்திய அணியின் வெற்றி ஓட்ட இலக்கைப் பார்த்தால் அனைவரும் பங்களிப்பு செய்துள்ளதும் தனிநபர் திறமையும் இணைந்து ஆதிக்க அவுஸ்ரேலிய அணியின் ஓட்ட இலக்கைப் போல் உள்ளது என்று அந்தப் பத்தியில் ஒப்பு நோக்கப்பட்டுள்ளது.

இந்தத் தோல்வி அவுஸ்ரேலியாவின் சரிவு என்பதை விட இந்தியாவின் எழுச்சி என்று கூறலாம் என்று அந்தப் பத்தி மேலும் தெரிவித்துள்ளது.

கிரிக்கெட் நிபுணரும் எழுத்தாளருமான பீட்டர் ரீபாக் முடிவில் அவுஸ்ரேலிய அணி சிறப்பாக வர முடியவில்லை, தோல்விதான் வந்தது. ஆனால் மதிப்பற்றுப் போய்விடவில்லை. பொண்டிங் அணி சிறப்பாகவே விளையாடியது. ஆனால் யுவ்ராஜ் சிங் என்ற ஒரு வீரர் தனது பெயருக்கு ஏற்ப நின்றார், ரெய்னாவும் உடன் இணைந்தார். இதனால் இந்த பதற்றமான போட்டியில் இந்தியா வென்றது என்றார்.

# சிறந்த பந்துவீச்சே காரணம்



(கொழும்பு)

இங்கிலாந்துடனான காலிறுதிப் போட்டியில் மிக இலகுவாக வெற்றி பெறக் காரணம் அணிப் பந்து வீச்சாளர்களின் சிறந்த பந்து வீச்சே என இலங்கையணியின் ஆரம்பத் துடுப்பாட்டவீரர் டில்சான் தெரிவித்தார்.


இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: விக்கெட் இழப்பின்றி அணியை வெற்றி பெறச் செய்ததையிட்டு மகிழ்ச்சியடைவதோடு மட்டுமன்றி இனிவரும் போட்டிகளில் திறமையைச் சிறப்பாக வெளிப்படுத்த அது ஒரு உந்துசக்தியாக அமையும்.

ஒரு அணியின் வெற்றி வாய்ப்புக்கு துடுப்பாட்டம் மட்டும் சிறப்பாக இருந்து விட்டால் போதாது. அணி வீரர்கள் சிறப்பாக பந்து வீசியதினாலேயே, எம்மால் இலகுவாக அடையக் கூடிய இலக்கினுள் இங்கிலாந்து அணியை மட்டுப்படுத்த முடிந்தது என்றார்.

# சிறந்த நீதிபதி அல்ல

அவுஸ்ரேலிய அணிக்கு எனது பங்களிப்பு எப்படி என்பது பற்றி தீர்மானிப்பதில் நான் சிறந்த நீதிபதியாக இருக்க முடியாது என அவுஸ்ரேலிய அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலகக் கிண்ணக் கிரிக்கெட்டில் காலிறுதிக்கு முன்பாக, உலகக் கிண்ணத்துடன் ஓய்வு பெறப் போகிறீர்களா? என்று நிருபர்கள் என்னிடம் கேட்டனர். அதற்கு அப்படி ஒரு எண்ணம் இல்லை என்று பதில் அளித்தேன். கிரிக்கெட்டில் தொடர்ந்து விளையாட விரும்புகிறேன். அவுஸ்ரேலிய அணிக்கு எனது பங்களிப்பு எப்படி என்பது பற்றி தீர்மானிப்பதில் நான் சிறந்த நீதிபதியாக இருக்க முடியாது. அதற்கென்று தேர்வுக் குழுவினர் அந்தப் பணியில் இருக்கிறார்கள். அவர்கள் எடுக்கும் முடிவை நான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வேன். அவுஸ்ரேலிய அணியை மீண்டும் பழைய நிலைக்கு எவ்வளவு சீக்கிரம் கொண்டு வர முடியுமோ? அவ்வளவு சீக்கிரம் தூக்கி நிறுத்த எனது கவனத்தை செலுத்தி வருகிறேன் என்றார்.



# விலகுவதற்கு சரியான நேரம்

ரிக்கி பொண்டிங் தலைவர் பதவியிலிருந்து விலகுவதற்கு இதுவே சரியான நேரம் என்று முன்னாள் வீரர்கள் இயன் சப்பல், ஷேன் வோர்ன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து சப்பல் 'தி அவுஸ்திரேலியன்' பத்திரிகைக்கு கூறியிருப்பது:

தோல்வியின் பிடியில் இருந்து அவுஸ்ரேலிய அணியை மீட்பதற்கு ரிக்கி பொண்டிங் தலைவர் பதவியிலிருந்து விலக வேண்டும். இதேபோல் அணியையும் உடனடியாக மாற்றியமைக்க வேண்டும்.

ஆஷஸ் தொடரோடு ரிக்கி பொண்டிங் தலைவர் பதவியில் இருந்து விலகியிருக்க வேண்டும். அது சரியான நேரம் என்று ஏற்கெனவே கூறியிருந்தேன். அடுத்த உலகக் கிண்ணத்துக்காக இப்போதே அணியை மாற்றியமைப்பதுதான் சரியாக இருக்கும். மிகச்சிறந்த இளம் வீரர்கள் அவுஸ்ரேலிய அணியில் உள்ளனர் என்றார்.

இதுகுறித்து ஷேன் வார்ன் கூறியது: அணியை மாற்றியமைக்க வேண்டும். ஆனால் பொண்டிங் தலைவர் பதவியில் தொடர்வதா, வேண்டாமா என்பதை அவர்தான் முடிவு செய்ய வேண்டும். எந்த முடிவு எடுத்தாலும் அவுஸ்ரேலியாவின் கிரிக்கெட் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு எடுக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

# ஸ்பெக்ட்ரம் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் ஊகத்தின் அடிப்படையாக அமைந்தவை

## என்கிறார் கனிமொழி எம்.பி



(சென்னை)

ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் ஊகத்தின் அடிப்படையானவை இதனைத் தான் நாங்கள் ஆரம்பத்திலிருந்தே கூறிவருகின்றோமென முதல்வர் கருணாநிதியின் மகளும் மாநிலங்களவை உறுப்பினருமான கனிமொழி தெரிவித்தார்.

முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசாவுக்கு தி.மு.க ஆதரவளிக்கும் வரை நானும் ஆதரவளிப்பேன்.

தனியார் தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியில் அவர் இதைத் தெரிவித்தார். 2ஜி விவகாரம் தொடர்பாக சி.பி.ஐ தாக்கல் செய்ய இருக்கும் குற்றப்பத்திரிகையில் உங்கள் பெயர் இடம்பெற்றால் என்ன செய்வீர்கள் என்று கேட்டபோது,"எதுவாக இருந்தாலும் எதிர்த்து நின்று போராடி வெற்றிபெறுவேன்.

ஸ்பெக்ட்ரம் விவகாரத்தால் தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில் தி.மு.கவுக்கு பாதிப்பு ஏற்படும் என்கிற கருத்தை அவர் மறுத்தார். ஊகத்தின் அடிப்படையிலான குற்றச்சாட்டுகளைப் பொறுத்து தேர்தல் முடிவுகள் அமையும் என்று எனக்குத் தோன்றவில்லை.

அரசு என்ன செய்திருக்கிறது, என்ன செய்கிறது என்பவைதான் தேர்தல் முடிவுகளைத் தீர்மானிக்கும் என்றார் அவர். இரண்டாவது முறையாக ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சிக்கு வந்து, அமைச்சரவை அமைக்கப்பட்ட போது, முதல்வர் குடும்பத்தில் பூசல் ஏற்பட்டது உண்மை தான் என்று ஒப்புக் கொண்ட கனிமொழி, "இது எல்லாக் குடும்பத்திலும் நடப்பதுதான். அதை ஏன் பெரிதுபடுத்துகிறீர்கள்?" என்று கேட்டார்.

மிக்சி, கிரைண்டர் வழங்குகிறோம் என்று வாக்குறுதி அளிப்பது இலவசப் பரிசுப் பொருள்கள் அளிப்பது போன்றதுதான் என்று கூறப்படும் கருத்தையும் கனிமொழி கடுமையாக ஆட்சேபித்தார். ராசா கைது செய்யப்பட்டது, உங்களிடம் சி.பி.ஐ விசாரணை நடத்தியது உள்ளிட்ட சம்பவங்களை முதல்வர் கருணாநிதி எப்படி எடுத்துக் கொண்டிருக்கிறார் என்று கனிமொழியிடம் கேட்கப்பட்டது.

அதற்குப் பதிலளித்த கனிமொழி, "அவர் (கருணாநிதி) 75 ஆண்டுகளுக்கும் மேலாக அரசியலில் இருக்கிறார். இதைப்போல் எத்தனையோ சம்பவங்களை அவர் பார்த்திருப்பார்"என்றார்.




# விசேட வசதியுடன் அமைக்கப்பட்ட ஜெயலலிதாவின் பிரசார வான்

(சென்னை)



அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா திருச்சி சிறீரங்கத்தில் கடந்த 24ஆம் திகதி தேர்தல் பிரசாரத்தைத் தொடங்கினார். வழக்கமாக வானில் அமர்ந்தபடி பிரசாரம் செய்யும் ஜெயலலிதா இந்த முறை வானில் மேல் கூரையை திறந்து வந்து பேசுகிறார். இதற்காக வானில் உட்புறம் உள்ள இருக்கை மேல் நோக்கி உயரும் வகையில் விசேஷ வசதியுடன் அமைக்கப்பட்டு உள்ளது. அவர் பேசி முடித்த பிறகு அந்த இருக்கை வேனுக்குள் சென்று மேல் கூரை மூடி விடுகிறது.

ஹைடிராலிக் எந்திரம் மூலம் இந்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இருக்கைக்கு மேல்புறம் சிறிய மேல்கூரை அமைக்கப்பட்டுள்ளது. அதில் 5 மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இருக்கையைச் சுற்றி 3 புறங்களும் கண்ணாடி அமைக்கப்பட்டுள்ளது. முன்பக்கம் அவர் பேசுவதற்கான குறிப்புகள் அடங்கிய பேப்பர்கள் வைத்துக்கொள்ள சிறு பலகை உள்ளது.

முன்பக்க இருக்கையில் அமர்ந்திருக்கும் ஜெயலலிதா பகல் முழுவதும் உள்ளே அமர்ந்து பேசுகிறார். மாலை 6மணிக்குப் பிறகு முன்பக்க இருக்கையில் இருந்து எழுந்து விசேஷ இருக்கைக்குச் சென்று பேசுகிறார்.

# இரண்டு விமானிகளின் சாதுரியத்தால் 300 பயணிகள் காப்பாற்றப்பட்டனர்

(சென்னை)

பீகார் மாநிலத்தில் இரண்டு விமான நிறுவனங்களின் விமானிகளின் சாதுர்யத்தால் 300க்கும் மேற்பட்ட பயணிகளின் உயிர் தப்பியது.

நேற்று பாட்னாவிலிருந்து - பெங்களூருக்கு விமானம் ஒன்று மாலை 6.47 மணிக்குப் புறப்பட்டது. விமானத்தில் சுமார் 180 பயணிகள் பயணம் செய்ய தயாராக இருந்தனர். விமானம் புறப்படுவதற்கான சமிக்ஞை அளிக்கும் பணியில் ஜெயப் பிரகாஷ் நாராயணன் என்பவர் ஈடுபட்டிருந்தார்.

அவர் பெங்களூர் செல்லும் விமானம் கிளம்புவதற்கான சிக்னலை அளித்தார். அதே நேரத்தில் எதிர்த் திசையில் மும்பையிலிருந்து - பாட்னாவிற்கு 140 பயணிகளுடன் வந்து கொண்டிருந்த விமானம் ஒன்று விமான நிலையத்திற்குள் நுழைய முற்பட்டது.

பெங்ளூர் விமானம் புறப்பட்டதற்கு எதிர் திசையில் மும்பை விமானமும் தரையிறங்க முற்பட்டது. இரண்டு விமானங்களுக்குமான உயர இடைவெளி குறைவாக இருப்பதைக் கண்ட மும்பை விமானி சாதுர்யமாக செயல்பட்டு விமானத்தை மேலெழுப்பினார்.

இதனையடுத்து பெங்களூர் விமானம் பறப்பதை நிறுத்தி ஓரம் கட்டப்பட்டது. பின்னர் மும்பை விமானம் பத்திரமாகத் தரையிறங்கியது. தொடர்ந்து பெங்களூர் விமானம் பறக்க அனுமதி வழங்கப்பட்டது. இதனால் ஒருமணி நேர தாமதம் ஏற்பட்டது.

இதனால் நடைபெறவிருந்த பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது. மேலும் கடந்த சில தினங்களாக போலி பைலட்டுகள் குறித்த செய்தி வந்து கொண்டிருக்கும் நேரத்தில் ஏர்டிராபிக் கண்ட்ரோலரின் செயல்களால் பயணிகள் பீதியடைந்துள்ளனர்.

# போலி அனுமதிப் பத்திரம் மேலும் 4 விமானிகள் கைது

(புதுடெல்லி)

போலி அனுமதிப் பத்திரம் பெற்ற டி.ஜி.சி.ஏ அதிகாரி உட்பட மேலும் 4 போலி விமானிகளை புதுடெல்லி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலும் இந்தப் போலி அனுமதிப் பத்திரம் தொடர்பாக இதுவரை மொத்தம் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 10 பேரும் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் போலிச் சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களை சமர்ப்பித்து விமானிக்கான அனுமதிப் பத்திரம் பெற்றதாக இதுவரை 14 விமானிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்


வாழ்க வளமுடன்

Happy Birthday!

## தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

3ஆவது அகவையை கடந்த 2011.03.22 ஆம் திகதி கொண்டாடினார்

பெயர்: தி.டினோசன்
முகவரி: பொன்னை லேன், ஆனைக்கோட்டை.



8ஆவது அகவையை கடந்த 2011.03.23 ஆம் திகதி கொண்டாடினார்



பெயர்: கோ.யதுஷா (யது)
முகவரி: கே.கே.எஸ் வீதி கோண்டாவில் மேற்கு.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ....................................
முகவரி : ....................................
பிறந்த ஆண்டு : ....................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. ............................ பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.


# ஊழலின் பிறப்பிடமாக தேர்தல்நாள் உள்ளது

(சென்னை)

## ஆணையாளர் குரேஷி கவலை

தேர்தலில் பெரிய அளவில் ஊழல் நடந்து வருகிறது. ஊழலின் பிறப்பிடமாகவே தேர்தல் நாள் இருக்கிறது. எனவே தேர்தலில் பண ஆதிக்கத்தை எதிர்த்து தேர்தல் திணைக்களம் போராடி வருகிறது. அதைப் புதிய இயக்கமாக செயற்படுத்தி வருகிறோம் என தலைமை தேர்தல் ஆணையாளர் குரேஷி பண ஆதிக்கம் பற்றித் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

டெல்லியில் ரூ.57 லட்சம் பணத்துடன் பிடிபட்ட எம்.பி. தான் கொண்டு சென்ற பணத்துக்கான ஆவணங்களை கொடுத்துள்ளார். ஆனாலும் தேர்தல் நடக்கும் மாநிலத்துக்கு பணத்தை கொண்டு சென்றதால் சந்தேகமாகவே உள்ளது.

தேர்தல் நேரத்தில் வேட்பாளர் ஒருவர் ரூ.2 கோடி செலவு செய்தால் வெற்றி பெற்றதும் ரூ.10 கோடி சம்பாதித்து விடுகிறார். இதை சம்பாதிக்க கிரிமினல் குற்றவாளிகளைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி கொள்கிறார்.

அரசியலை பணம் சம்பாதிப்பதற்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்கின்றனர். தேர்தல் செலவுகளை தீவிரமாக கண்காணித்து வருகிறோம்.

ஆனாலும் இதில் 100 சதவீதம் வெற்றி அடைய முடியவில்லை. 6 மாதத்துக்கு முன்பு தேர்தல் செலவு கண்காணிப்புக்கு என வருமானவரி அதிகாரி தலைமையில் தனி பிரிவை ஏற்படுத்தினோம். அது நல்ல பலனை கொடுத்து வருகிறது என்று தெரிவித்துள்ளார்.

# அண்ணாவின் ஆவி கூறியதால்தான் அ.தி.மு.கவுடன் கூட்டணி வைத்துள்ளேன்

(சென்னை)



அண்ணாவின் ஆவி கூறியதால்தான் அ.தி.மு.கவுடன் கூட்டணி வைத்துள்ளதாக விஜயகாந்த் கூறினார்.

அ.தி.மு.க வேட்பாளர்களை ஆதரித்து அம்பத்தூர் பொன்னேரி தொகுதிகளில், தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் பிரசாரம் மேற்கொண்டார்.

அப்போது பேசிய விஜயகாந்த், நான் ஏற்கனவே கூறி வந்ததைப் போலவே, மக்களுடனும் தெய்வத்துடனும் தான் கூட்டணி வைத்துள்ளேன் என்றார்.

நான் சிறு வயது முதலே எம்.ஜி.ஆர். மீது பற்று உள்ளவன். அவர் ஒவ்வொரு படத்திலும் எந்தெந்த மாதிரி உடை உடுத்தி நடித்தார் என்பது கூட எனக்குத் தெரியும். அ.தி.மு.கவுடன் விஜயகாந்த் ஏன் கூட்டுச் சேர்ந்தார் என்று நீங்கள் நினைத்து இருக்கலாம்.

பேறறிஞர் அண்ணா மீது கொண்டுள்ள பற்றுதல் காரணமாக அண்ணா பெயர் கொண்ட அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைத்துள்ளேன். அண்ணாவின் ஆவி கூறியதால் தான், அவர் பெயரிலான கட்சியான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணி வைத்துள்ளேன் என்றார்.

# ஐ.தே.க.வுக்குள் உட்கட்சிப் பூசல் உச்சம் ஒருவரை ஒருவர் பழிவாங்கும் படலம் ஆரம்பம்!





(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் தலைமைப் பதவிக்கான போட்டியின் உட்பூசல் நிலை காரணமாக கீழ் மட்டத் தொண்டர்களின் பாடு பெரும் திண்டாட்டத்திற்கும், தர்மசங்கடத்திற்கும் உள்ளாகியுள்ளது.

ரணிலுக்கும், சஜித் பிரேமதாசவிற்கும் தனித்தனியாக இரு பிரிவுகளாக தொண்டர்கள் பிரிந்து நின்று ஆதரவளித்துச் செயற்பட்டு வருகின்றனர். தொண்டர்கள் போலவே பாராளுமன்ற, மாகாண மற்றும் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களதும் பிரதேச அமைப்பாளர்களதும் நிலையும் தர்மசங்கடத் திற்குள்ளாகியுள்ளது.

ரணிலுக்கு ஆதரவானவர்களை சஜித்தும், சஜித்திற்கு ஆதரவானவர்களை ரணிலும் பழிவாங்கும் படலம் ஏற்கனவே கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவில் அரங்கேறி வருகிறது.

இதேவேளை தலைமைப் பதவியைக் குறிவைத்துச் செயற்படும் இவ்விருவரினதும் நெருங்கிய சகாக்களாக இருக்கும் சிறுபான்மை பிரதிநிதிகளான தமிழ், முஸ்லிம் முக்கியஸ்தர்கள் பாடும் பெரும் திண்டாட்டமாகவே உள்ளது.

குறிப்பாக இதுவரை காலமும் ஐ.தே.க.வுடன் கூட்டு வைத்திருந்த சிறுபான்மைக் கட்சிகளுக்கு ரணில் மீண்டும் தலைவராகியமை பேரிடியாகவே அமைந்துள்ளது. தேர்தல்களில் ஐ.தே.க.வுடன் தமிழ், முஸ்லிம் கட்சிகள் இணைந்து கேட்க முடியாதவாறு ஒரு சட்டத்தை ரணில் கொண்டு வந்திருந்தார். அதனால் இக் கட்சிகள் தமது தனித்துவத்தை இழந்துவிட்டு ஐ.தே.க.வுடன் இணைந்து கட்சியுரிமை பெற்றே தேர்தல்களில் போட்டியிட வேண்டியிருந்தது.

சஜித் தலைவராக வந்தால் இந்நிலை மாறுமென தமிழ், முஸ்லிம் கட்சிகள் எதிர் பார்த்துத் தமது ஆதரவை சஜித்திற்கு வழங்கின. இப்போது ரணில் மீண்டும் தலைவராகியுள்ளதால் இனி இச்சிறு கட்சிகள்பாடு திண்டாட்டம் தான. இவர்கள் ரணிலின் கோபத்திற்கு ஆளாகவே நேரிடும் எனப் அச்சம் தெரிவித்துள்ளனர்.

# கிழக்கில் போரின் வடுக்கள் 13ஆயிரம் பேர் அங்கவீனம்



(கொழும்பு)

போர் மற்றும் இயற்கை அனர்த்தங்களால் கிழக்கு மாகாணத்தில் 13,ஆயிரம் பேர் அங்கவீனம் அடைந்துள்ளனர் என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

இலங்கை நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனோமா கமகே எழுப்பிய கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கும் போதே அரச தரப்பு இதனைத்தெரிவித்துள்ளது.

திருமலை மாவட்டத்தில் 660 பேர் பார்வையை இழந்துள்ளனர். 689 பேர் பேசும் மற்றும் கேட்கும் சக்தியை இழந்துள்ளனர். 1,005 பேர் மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். 2,030 பேர் இயங்கும் சக்தியை இழந்துள்ளனர் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 671 பேர் பார்வையை இழந்துள்ளனர். 1,105 பேர் பேசும் மற்றும் கேட்கும் சக்தியை இழந்துள்ளனர். 884 பேர் மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். 1,650 பேர் இயங்கும் சக்தியை இழந்துள்ளனர். 594 பேர் பல்வேறு வகையான பாதிப்புக்களால் சுயமாக இயங்கமுடியாத நிலையில் உள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் 635 பேர் பார்வையை இழந்துள்ளனர். 417 பேர் பேசும் மற்றும் கேட்கும் சக்தியை இழந்துள்ளனர். 780 பேர் மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். 1,650 பேர் இயங்கும் சக்தியை இழந்துள்ளனர் என அரசாங்க புள்ளிவிபர தகவல்கள் தெரிவிக்கின்றன.

# விதவைகளின் புனர்வாழ்வுக்கு சர்வதேசம் உதவவேண்டும்

(கொழும்பு)

இலங்கையில் யுத்தம் நடந்த பிரதேசங்களில் வாழும் 89 ஆயிரம் விதவைப் பெண்களுக்குப் புனர்வாழ்வளிக்கும் முயற்சிகளை சர்வதேச சமூகம் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. லண்டனில் செயற்படும் மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கிங்ஸ்டனில் கூடியபோதே இந்த விடயம் கவனத்தில் கொள்ளப்பட்டது.

சர்வதேச மகளிர் தினத்தின் நூற்றாண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. தமிழ் பெண்கள் அபிவிருத்தி மன்றம், முதியோருக்கு வலுவூட்டல் சங்கம் என்பன இணைந்து இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.



லண்டனில் செயற்படும் பல்வேறு சமூக நல அமைப்புக்களின் மகளிர் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர். கிங்ஸ்டன் மாநகர மேயர் மற்றும் மாநகர சபை உறுப்பினர்களும் இங்கு சமுகமளித்திருந்தனர்.

# பசிலுக்கு பிரதமர் பதவி வேண்டும் கோரிக்கை விடுக்கின்றார் மேர்வின்

(கொழும்பு)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிற்கு பிரதமர் பதவி வழங்கப்பட வேண்டுமென அமைச்சர் மேர்வின் சில்வா ஜனாதிபதியிடம் கோரிக்கைவிடுத்துள்ளார்.

சபாநாயகர் சமல் ராஜபக்ஷநாடாளுமன்றின் ஒழுக்கத்தை செம்மைப்படுத்தி வருவதாகவும், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியதுடன், கொழும்பு நகரை அழகுபடுத்தி வருவதாகவும் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் காணப்படும் ஒரே பிரச்சினை பிரதமர் பதவிக்கான பிரச்சினைதான் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மிக நீண்ட இடைவெளிக்குப் பின்னர் கம்பஹா மாவட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி பாரிய வெற்றியீட்டியதாக அவர் தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்ட வெற்றிக்கும், அபிவிருத்திப் பணிகளுக்கும் பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் ஒத்துழைப்பு அளப்பரியது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரதமர் பதவியில் மாற்றம் ஏற்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை, பிரதமர் பதவிக்காக சில முக்கிய அமைச்சர்கள் இரகசியமாக போட்டியிட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஐ.தே.கவின் தொகுதி அமைப்பாளர்கள் புதிதாக நியமிக்கப்படவுள்ளனர்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் சகல தொகுதி அமைப்பாளர்களும் புதிதாக நியமிக்கப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் நேரடிக்கண்காணிப்பின் கீழ் புதிய தொகுதி அமைப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

தற்போது தொகுதி அமைப்பாளராக செயற்படுவோர் கட்சியின் வெற்றிக்காக காத்திரமான சேவையாற்றவில்லை எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக புதிய அமைப்பாளர்கள் நியமிக்கப்பட உள்ளதாகவும், விரைவில் பதவி நியமனங்கள் அறிவிக்கப்பட உள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

ஒழுக்க விதிகளை மீறிய மற்றும் செயற்குழுவின் தீர்மானங்களுக்கு புறம்பாக செயற்பட்டவர்களுக்கு தொகுதி அமைப்பாளர் பொறுப்பு வழங்கப்பட மாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# அமைச்சர்களுக்கான பாதுகாப்பு குறைக்கப்படவுள்ளது

(கொழும்பு)

அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களுக்கான பாதுகாப்புக் கட்டமைப்பில் மாற்றம் கொண்டு வர அரசாங்கம் முடிவெடுத்துள்ளது.

அதன் பிரகாரம் அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களுக்கான பாதுகாப்பு ஊழியர்கள் மற்றும் பாதுகாப்புக்கான வாகனங்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதற்கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு ஊழியர்கள் மற்றும் வாகனங்கள் என்பன தொடர்பிலும் அவர்களுக்கான பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர்பிலும் அறிக்கையொன்றைத் தயார் செய்யுமாறும் அவர் தனது செயலாளர் லலித் வீரதுங்கவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

மேலும் இனி வரும் காலங்களில் அமைச்சர்களின் பாதுகாப்பு வாகனங்களுக்கு எரிபொருள் வழங்குவதை மட்டுப்படுத்தவும் ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்கள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் தங்கள் பாதுகாப்பு வாகனங்கள் புடைசூழ பொதுமக்களுக்கு இடையூறான வகையில் பயணங்களை மேற்கொள்வதாகக் கிடைத்த முறைப்பாட்டினையடுத்தே ஜனாதிபதி பிரஸ்தாப நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

## எலிக் காய்ச்சலினால் 26பேர் பலி


(கொழும்பு)

இந்த ஆண்டின் பதினொரு வாரங்களில் இருபத்தி ஆறு பேர் எலிக் காய்ச்சலினால் சாவடைந்துள்ளனர். இந்த நோய்த் தாக்கம் தொடர்பான 886 முறைப்பாடுகள் குருநாகலில் இருந்து கிடைக்கப் பெற்றுள்ளன. அனுராதபுரம் கம்பாகவில் பெறப்பட்ட பதிவுகளிலிருந்து இறந்தவர்களில் அதிகமானோர் குருநாகல் பகுதியைச சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கபட்டுள்ளது.

# கடலில் நீந்தி சாதனை

(ராமேஸ்வரம்)

இலங்கை தலைமன்னார் முதல் ராமேஸ்வரம் தனுஷ்கோடிக்கு கடலில் நீந்தி, ஆந்திர பொலிஸ் ஏ.டி.ஜி.பி., ராஜிவ் திரிவேதி சாதனை படைத்துள்ளார். ஆந்திர ஏ.டி.ஜி.பி.,யாக பணியாற்றும் இவர்,கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை 3.45மணிக்கு இலங்கை தலைமன்னார் துறைமுகத்திலிருந்து கடலில் குதித்து, தனது தொடர் நீச்சல் பயணத்தைத் தொடங்கி, மாலை 4.30 மணிக்கு தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரையில் கரையேறினார். 12 மணி 45 நிமிடத்தில் தலைமன்னாருக்கும் தனுஷ்கோடி அரிச்சல் முனைக்கும் இடையே 28 கி.மீ,தூரத்தை நீந்திக் கடந்து சாதனை படைத்ததாக, உடன் சென்ற அதிகாரிகள் தெரிவித்தனர். உள்ளூர் பொலிஸார் தரப்பில் ஏ.டி.ஜி.பி., நீந்தி வரும் தகவல் நிருபர் களுக்குத் தெரிவிக்கப்பட்டது. தனுஷ் கோடி அரிச்சல்முனை கடற்கரையில் கரையேறிய ராஜிவ் திரிவேதியை உள்ளூர் பொலிஸ் அதிகாரிகளும், கடலோர காவல் படையினரும் வரவேற்றனர்.



# கிழக்கின் துணைப்படைகள் குறித்து பிளேக்குடன் கலந்துரையாடிய பசில்

## இந்து பத்திரிகை தகவல்



(கொழும்பு)

**கிழக்கிலுள்ள துணைப் படைகள் தொடர்பாக இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் ரொபெர்ட் பிளேக்குடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆராய்ந்திருந்ததாக விக்கிலீக்ஸிடம் இருந்து பெறப்பட்ட அமெரிக்கத் தூதரக இரகசியக் கேபிள் தகவலை இந்துப் பத்திரிகை நேற்று முன்தினம் சனிக்கிழமை பிரசுரித்துள்ளது.**

கிழக்கிலங்கையில் பாதுகாப்புப் பிரச்சினை தொடர்ந்து இருக்கின்றதென்பதை இணங்கிக் கொண்ட பசில் ராஜபக்ஷ, துணைப்படைகளைக் கலைத்து விடுவது தொடர்பான கால அட்டவணை குறித்து பாதுகாப்புச் செயலாளருடன் கலந்தாராய இணங்கிக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2008-4-11 இல் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்திலிருந்து இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்த கேபிளிலிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அச்சமயம் அமெரிக்கத் தூதுவராக இருந்த ரொபேர்ட் பிளேக்கினால் இந்தக் கேபிள் அனுப்பப்பட்டிருந்தது. ரொபெர்ட் பிளேக்குடனான சந்திப்பின் போது தமிழ் நாடு மீன்பிடிப் படகுகள் தொடர்பான சர்ச்சைக்கு இருதரப்பும் இணக்கம் கண்டிருப்பதாக அதாவது தனது டில்லி விஜயத்தின் போது தீர்வு காணப்பட்டிருப்பதாக பசில் ராஜபக்ஷ கூறியுள்ளார்.

அத்துடன், கிழக்கு மாகாணத்திற்கு அதிகளவு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்குமாறு இந்தியா வலியுறுத்தியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஏற்கனவே மத்திய மாகாணத்திற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக அமைச்சரவை மட்டத்திலான குழுவொன்றை ஜனாதிபதி விரைவில் நியமிப்பார் எனவும் பசில் ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் அதிகாரப் பகிர்வு தொடர்பாக அச்சமயம் இந்தியத் தூதுவராக இருந்த அலோக் பிரசாத் நம்பிக்கையின்மையை வெளிப்படுத்தியிருந்ததாகவும் ரொபெர்ட் பிளேக்கின் கேபிளில் குறிப்பிடப்பட்டுள்ளது

## எதிர்மனுத் தாக்கல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ச, தாக்கல் செய்த அவதூறு வழக்குத் தொடர்பில் எதிர்மனுவை அரசாங்கத்தின் பிரசுர நிறுவனமான லேக்ஹவுஸ் நிறுவனம் தாக்கல் செய்துள்ளது.

தமக்கு அவதூறு ஏற்படும் வகையில் 2007 ஆம் ஆண்டு நவம்பர் 18ஆம் திகதியன்று சிலுமின செய்தித்தாளில் கட்டுரை வெளியிடப்பட்டமைக்கு எதிராகவே விஜயதாஸ ராஜபக்ச வழக்கை தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை விசாரணை செய்த கொழும்பு மாவட்ட நீதிமன்றம் மனுதாரரான விஜயதாஸ ராஜபக்சவுக்கு 500 மில்லியன் ரூபாய்களை செலுத்துமாறு உத்தரவிட்டது.

அத்துடன் லேக்ஹவுஸ் நிறுவனம் 14 நாட்களுக்குள் எதிர்மனுவை தாக்கல் செய்யுமாறும் உத்தரவிட்டது.

இதன் அடிப்படையிலேயே லேக்ஹவுஸ் நிறுவனம் எதிர்மனுவை தாக்கல் செய்துள்ளது.

தாம் ஆளும் கட்சியில் இருந்து எதிர்க்கட்சிக்குச் சென்ற சில நாட்களில் நீதித்துறையை அவமதிக்கும் வகையில் தமக்கு எதிராக சிலுமின கட்டுரையை வெளியிட்டதாக விஜயதாஸ ராஜபக்ச குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கே.பி. மீதான பிடியாணையை இன்டர்போல் திரும்பப்பெறவில்லை



(கொழும்பு)

புலிகளின் முன்னாள் சர்வதேச பொறுப்பாளராக இருந்த குமரன் பத்மநாதன் மீது இன்டர்போல் பொலிஸார் விதித்திருந்த கைதுசெய்வதற்கான சிறப்பு பிடியாணை இன்னும் திரும்பப்பெறப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், மற்றும் புலனாய்வுத்துறைத் தலைவர் பொட்டு அம்மான் ஆகியோர் மீது இன்டர்போல் விதித்திருந்த சிறப்பு பிடியாணை திரும்பப்பெறுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கத்தின் பாதுகாப்பின் கீழ் குமரன் பத்மநாதன் இன்னமும் தமது செயற்பாடுகளை மேற்கொண்டிருப்பதன் காரணமாகவே அவர் மீதான சிறப்பு பிடியாணை திரும்பப்பெற்றுக்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இந்தநிலையில் கே.பியின் பிந்திய புகைப்படத்தையும் இன்டர்போல் பிரசுரித்துள்ளது.

இதேவேளை 81 இலங்கையர்களுக்கு எதிராக இன்டர்போல் தமது கைது ஆணையைப் பிறப்பித்துள்ளது. இதில் 51 பேர் இலங்கை அரசாங்கத்தினால் கோரப்படும் வெளிநாடுகளில் வசிப்பவர்களாகும்.

இந்த எண்ணிக்கையில் 30 பேர் பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பாகவும், 25 பேர் மோசடி ஊழல்கள் தொடர்பிலும், 26 பேர் கடத்தல்கள் தொடர்பிலும் தேடப்பட்டு வருபவர்களாவர்.

# தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் அரசு சுமுகமான உறவைப்பேணவேண்டும்

## பேராசிரியர் ரொஹான் குணரட்ண



(கொழும்பு)

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் சுமுகமான உறவுகளை அரசாங்கம் பேண வேண்டுமென சர்வதேச பயங்கரவாதத் தடுப்பு நிபுணர் பேராசிரியர் ரொஹான் குணரட்ன தெரிவித்துள்ளார். புலிகளின் பிரசாரங்களைத் தடுத்து நிறுத்த வேண்டுமாயின் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் காணப்படும் முரண்பாடுகளை அரசாங்கம் களைய வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

யுத்த பலத்தை இழந்துள்ள புலிகளுக்குப் பிரதேச மக்களின் ஆதரவு கிடைக்கப்பெறவில்லை என அவர் தெரிவித்துள்ளார். இதனால் மனித உரிமை அமைப்புக்கள் உள்ளிட்ட சர்வதேச தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் புலிகள் போலியான பிரசாரங்களை முன்னெடுத்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிவிவகார அமைச்சு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் சுமுகமான உறவுகளைப் பேண வேண்டுமென வலியுறுத்தியுள்ளார். மனித உரிமை கண்காணிப்பகம், சர்வதேச மன்னிப்புச் சபை, சர்வதேச அனர்த்த குழு போன்ற சர்வதேச தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராகவும், புலிகளுக்கு ஆதரவாகவும் கருத்துக்களை வெளியிட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய அபிவிருத்திப் பணிகளில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை அரசாங்கம் இணைத்துக்கொள்ள வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் சுமுகமான உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் சர்வதேச அரங்கில் இலங்கை தொடர்பான நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்கு எதிராகச் செயற்படும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைத் தடை செய்வதனை விடவும், அவற்றை அரவணைப்பது புத்திசாதுரியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார.

# முனைப்பு நிறுவனம் வழங்கும் வறிய பல்கலை மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம்

(மட்டக்களப்பு)

முனைப்பு நிறுவனத்தினால் வருடாந்தம் வழங்கப்படும் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் 2011ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை வழங்கப்பட்டுள்ளது.

மருத்துவம் உட்பட பல்வேறு துறைகளில் தெரிவு செய்யப்பட்ட மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 23 மாணவர்களுக்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் வைத்து முனைப்பின் தலைவர் கு.அருணாசலம் தலைமையில் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்டுள்ள இம்மாணவர்கள் தங்கள் பல்கழைக்கழகப் படிப்பை முடிக்கும் வரையில் மாதாந்தம் புலமைப்பரிசிலைப் பெறமுடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வருடத்துக்கான இத்திட்டத்தில் திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் நாளடைவில் ஏனைய மாவட்டங்களுக்கும் இத்திட்டம் விஸ்தரிக்கப்படவுள்ளது.

முனைப்பு நிறுவனம் கடந்த ஆண்டு தெரிவு செய்யப்பட்ட 10 மாணவர்களுக்கு ஏற்கனவே



புலமைப்பரிசில்களை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


இலங்கையில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் சிந்தனையில் இயங்கிவரும் முனைப்பு நிறுவனம் கிழக்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் உடனடித்தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் ஏற்கனவே உணவுப்பொருட்கள், பால்மா, மருந்துப்பொருட்கள் உட்பட பல்வேறு அத்தியாவசியப் பொருட்களை வழங்கி வைத்ததுடன், மாணவர் வளமேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒரு மில்லியன் ரூபா செலவில் தமிழ், முஸ்லிம் மாணவர்களுக்குப் பாடசாலை உபகரணங்கள் வழங்கிவருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.



சமூக முன்னெடுத்தல் குழுவின் ஈராண்டு நிறைவும், மகளிர் தின விழாவும் நேற்று முன்தினம் மட்டுவில் தெற்கு சாவகச்சேரி வளர்மதி விளையாட்டுக்கழகப் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றபோது, பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் மற்றும் சிறப்பு விருந்தினர்கள், மாணவர்களின் பான்ட் வாத்திய அணிவகுப்புடன் நிகழ்வுக்கு அழைத்துவரப்படுவதைக் காணலாம். (69)

# இலங்கைத் தமிழருக்காக பேசுபவர்களை மேற்கு நாடுகள் இனங்காண வேண்டும்

## தூதுவர் ரவிநாத ஆரியசிங்க தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கைத் தமிழர்களுக்காக யார் பேசுகிறார்கள் என்பதை மேற்குலக நாடுகளின் அரசாங்கங்கள் தீர்மானிக்க வேண்டும் என இலங்கை அரசாங்கம் கூறியுள்ளது.

சுதந்திர தமிழீழத்தை நாடும் புலம்பெயர்ந்தவர்களா, அல்லது இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள சமாதானத்தை விரும்பும், இலங்கையிலுள்ள ஏனைய சமூகங்களுடன் ஒற்றுமையை ஏற்படுத்தத் தயாராகவுள்ள தமிழ்மக்களா? இலங்கை தமிழர்களுக்காக பேசுகிறார்கள் என்பது தொடர்பாக மேற்குலக அரசாங்கங்களும் விரைவில் தீர்மானிக்க வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம், பெல்ஜியம், லக்ஸம்பர்க் ஆகியவற்றுக்கான இலங்கைத் தூதுவர் ரவிநாத ஆரியசிங்க கூறியுள்ளார்.

பெல்ஜியத் தலைநகர் பிரஸல்ஸில், ஐரோப்பாவில் 'புலிகளின் திட்டங்களை தோற்கடித்தல்' எனும் தலைப்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

நீதித்துறை, பொலிஸ், புலனாய்வுத்துறை, இராணுவம் முதலான துறைகளைச் சார்ந்த சிரேஷ்ட அதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர்.

2009 ஆம் ஆண்டு இலங்கையில் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் அவர்களின் சொத்துக்கள், ஆளணி மற்றும் செயற்பாடுகளுக்கு பிரத்தியேக உரிமையுள்ள இடமாக ஐரோப்பா மாறியுள்ளது எனவும் தூதுவர் ரவிநாத ஆரியசிங்க கூறினார்.

கடந்த 15 மாதங்களில் ஜேர்மனி, நெதர்லாந்து, நோர்வே, சுவிட்ஸர்லாந்து ஆகிய நாடுகளில் 32 புலிகள் அங்கத்தவர்களும், பிரான்ஸில் 21 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

புலிகளின் சொத்துக்கள் மற்றும் முகவர் அமைப்புகளின் வலையமைப்புக்கு பொறுப்பான நெடியவன், புலிகளின் புலனாய்வுப் பிரிவின் உயிர்தப்பியுள்ள தலைவரான விநாயகம், பிரசாரப் பொறுப்பாளர் ஜெயச்சந்திரன், உலகத் தமிழர் பேரவையின் தலைவர் அருட்சகோதரர் இமானுவல் ஆகியோர் ஐரோப்பாவில் உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

# பிச்சை எடுப்பது முற்றாகத் தடை

(கொழும்பு)

ரயிலில் பிச்சை எடுப்பவர்களை முற்றிலும் அகற்றுவதற்காக ரயில்வே திணைக்கள பாதுகாப்பு ஊழியர்களை கடமையில் ஈடுபடுத்தவுள்ளதாக ரயில்வே திணைக்கள திட்டமிடல் பணிப்பாளர் விஜய சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலத்தில் பிச்சைக்காரர்கள் ரயில் நிலையங்களிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட போதும் மீண்டும் அவர்கள் தற்போது பிச்சை எடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆதலால் மீண்டும் அவர்களை அப்புறப்படுத்த கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வழி தொழிற்கல்வியை மேம்படுத்துவதாகும்

## அமைச்சர் டலஸ் கூறுகிறார்

(கொழும்பு)

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரே வழி தொழிற்பயிற்சி மற்றும் தொழிற்கல்வி என்பவற்றை மேம்படுத்துவதே என அமைச்சர் டலஸ் அழகபெரும தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதற்கு முன்னர் இருந்த அரசாங்கம் தொழிற்கல்வியை மேம்படுத்துவதற்கான எந்தவித அக்கறையையும் செலுத்தவில்லை என அவர் குறிப்பிட்டார்.

எனினும் தற்போதைய அரசாங்கம் தொழிற் கல்விக்கு முன்னுரிமை கொடுத்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். கல்விப் பொதுத்தராதர சாதாரண தரம் மற்றும் உயர்தர பரீட்சைகளில் சித்தி எய்தாவிட்டாலும் தொடர்ந்தும் சமூகத்தில் செல்வாக்குடன் வாழ தொழிற்பயிற்சி மற்றும் தொழிற்கல்வி என்பவற்றில் நாட்டம் செலுத்த வேண்டும் எனவும் அமைச்சர் டலஸ் அழகபெரும தெரிவித்தார்.

# மாணவர் அமைப்புகளுக்கு இடைக்காலத் தடை விதிப்பு

## சப்ரகமுவ பல்கலைக்கழகம் நடவடிக்கை

(கொழும்பு)

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் அனைத்து மாணவ சங்கங்களுக்கும் இடைக்காலத் தடை விதித்துள்ளதாக பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர். மகிந்த ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும், இவ்வாறான சங்கங்களினால் மாணவர்களது கல்விக்கு பல்வேறு வகையில் தடை ஏற்படுவதுடன், வெவ்வேறு பாதிப்புகளும் ஏற்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அண்மையில் இடம்பெற்ற போராட்டத்தினால் பல்கலைக்கழக விரிவுரைகள் தடைப்பட்டதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

# நாமல் ராஜபக்ஷவுக்கு விசேட ஊடகப் பிரிவு



(கொழும்பு)

ஜனாதிபதியின் புதல்வரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தனியான ஓர் ஊடகப் பிரிவொன்றை உருவாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசியலில் தமது நன்மதிப்பை அதிகரித்துக் கொள்ளும் நோக்கில் இந்த ஊடகப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. அரசியல் பிரச்சாரங்களுக்கு ஊடகத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டுள்ள நாமல் ராஜபக்ஷ, இவ்வாறு தனியான ஊடகப் பிரிவினை உருவாக்கியுள்ளார்.

இந்த ஊடகப் பிரிவினர் நாமல் ராஜபக்ஷவின் நன்மதிப்பை உயர்த்தக் கூடிய வகையிலான பிரச்சாரங்களை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

நாமல் ராஜபக்ஷ கலந்து கொள்ளும் நிகழ்வுகள், வைபவங்கள் பற்றிய தகவல்களை உடனுக்குடன் ஏனைய நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# நகைகளைக் கடத்திய இலங்கைப் பிரஜைக்கு விஸா வழங்குவதற்கான கோரிக்கை நிராகரிப்பு

(கொழும்பு)

தங்க நகைகளை கடத்திய விவகாரத்தில் குற்றவாளியாக காணப்பட்ட இலங்கைப் பிரஜையொருவர் தனக்கு விஸா வழங்குமாறு இந்திய மத்திய அரசாங்கத்திற்கு உத்தரவிடக்கோரி தாக்கல் செய்த மனுவை சென்னை மேல் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

வேலு நடேசன் கோபிநாத் தனது சகோதரி தமயந்தி தீபகுமார் மூலம் இம்மனுவை தாக்கல் செய்திருந்தார். கடந்த வருடம் செப்டெம்பர் 25 ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவில் கோபிநாத்துக்கு விஸா வழங்குமாறு மத்திய அரசாங்க அதிகாரிகளுக்கு பொருத்தமான உத்தரவு வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந்திய வெளிவிவகார அமைச்சு தனது பதில்மனுவில், கோபிநாத், 2009.11.11 ஆம் திகதி சென்னை விமான நிலையத்தில் 4.414 கிலோகிராம் தங்கத்தை இந்தியாவுக்கு கடத்திச் செல்ல முற்பட்டபோது கைது செய்யப்பட்டதாகவும், அவருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டதாகவும் தெரிவித்திருந்தது. இதில் குற்றவாளியாக ஒப்புக்கொண்ட கோபிநாத்திற்கு 25,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டிருந்தது.

கடத்தல் முயற்சி மூலம் இந்திய சட்டத்தை கோபிநாத் மீறியுள்ளதால் அவர் மீண்டும் நாட்டிற்குள் நுழைவதை தடுக்கும் உத்தரவு தகுதிவாய்ந்த அதிகாரிக்கு கடந்த வருடம் பெப்ரவரி 24 ஆம் திகதி பிறப்பிக்கப்பட்டதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சின் பதில் மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ்வழக்கை விசாரித்த நீதிபதி சந்துரு தனது தீர்ப்பில், வெளிநாட்டவர்களின் உரிமைகள் தொடர்பாக உயர் நீதிமன்றமே தீர்மானிக்கிறது எனவும், மனுதாரர் ஓர் இந்திய பிரஜை இல்லையென்பதால் மனுதாரரின் உரிமை தொடர்பாக கருத்திற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

இக்குற்றவாளி இந்தியாவுக்குள் நுழைவதைத் தடுப்பதற்கு இந்திய அரசாங்கத்திற்கு திட்டவட்டமான உரிமை உள்ளது எனக் கூறி மனுவை தள்ளுபடி செய்தார்.

## புதியவர்களை....

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்களை அமைதிப்படுத்தவும் ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். அவற்றுக்குத் தேவையான அரசியலமைப்பு திருத்தம் குறித்த கலந்துரையாடல்கள் தற்போது ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்று வருவதாக ஜனாதிபதி செயலக அதிகாரியொருவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

## இறுதிக்கட்ட...

விரைவாக இறுதி அறிக்கையைத் தயார் செய்யும் நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பொலிஸ் மா...

மகிழ்ச்சியடைவேன் என்று இரத்தினச் சுருக்கமான நெற்றியடி வரிகளின் மூலம் அவரது சேவை நீடிப்புக் கோரிக்கையை பாதுகாப்புச் செயலாளர் நிராகரித்துள்ளார்.

## ஜனாதிபதி...

திறக்கப்பட்டுள்ளது. அதற்கான வைபவத்தின் பிரதம அதிதிகளாக ஜனாதிபதியும், பிரதமரும் அழைக்கப்பட்டிருந்தனர்.

அதற்கான அழைப்பை விகாராதிபதி கலபொட ஞானிஸ்ஸர தேரர் விடுத்திருந்தார். இந்த நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவரும் கலந்துகொண்டார்.

## முன்னாள் புலி...

தற்போது 9 புனர்வாழ்வு நிலையங்களே உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெளிவிவகார அமைச்சர்...

லோட் கிறீன். உள்ளிட்ட பல தரப்பினரையும் சந்திக்கவுள்ளதாக கூறியுள்ள அம்சா, அது பற்றிய தகவல்களை வெளியிட மறுத்துவிட்டார்.

இதேவேளை, ஒரு நாட்டின் வெளிவிவகார அமைச்சர், இன்னொரு நாட்டின் வெளிவிவகார அமைச்சரின் சந்திப்பை உறுதிப்படுத்திக் கொள்ளாமல் அந்த நாட்டுக்குப் பயணம் மேற்கொள்ளக் கூடாது என்பது அனைதுலக உறவுகள் தொடர்பாக பேணப்படும் பொதுவான நடைமுறை என்று இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## விரைவில் புரிந்துணர்வு....

கடல் வளங்களை எவ்வாறு பகிர்ந்துகொள்ளலாம் என்றும் இன்றைய கூட்டத்தில் விரிவாக ஆராயப்படவுள்ளது.

இன்றைய பேச்சுக்களுக்காக ஏற்கனவே இரு நாடுகளின் சார்பாக தலா ஒவ்வொரு தூதுக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இலங்கைத் தூதுக்குழுவுக்கு வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர் ரஞ்சித் உயங்கொட தலைமை தாங்கவுள்ளார். மீன்பிடித்துறை அமைச்சு, இலங்கை கடற்படை, புது டில்லியிலுள்ள உயர் ஸ்தானிகராலய அதிகாரிகள், சென்னையிலுள்ள உதவி உயர் ஸ்தானிகராலய அதிகாரிகள் ஆகியோரும் இப்பேச்சுவார்த்தையில் பங்குபற்றவுள்ளனர்.

இந்திய தூதுக்குழுவுக்கு இந்திய வெளிவிவகார அமைச்சின் இணைச் செயலாளர் ரி.எஸ்.திருமூர்த்தி தலைமை தாங்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விவகாரம் தொடர்பாக இந்திய கடற்தொழில் சங்கப் பிரதிநிதிகளுடனும் வடபகுதி கடற்தொழில் சங்கங்களின் பிரதிநிதிகளுடனும் ஆரம்பக் கட்டப் பேச்சுக்கள் கொழும்பில் கடற்தொழில் அமைச்சில் கடந்த வாரம் இடம்பெற்றிருந்தது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இப்பேச்சுக்களை ஒருங்கிணைப்பு செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிறுபிள்ளைத்தனமான முனைப்பைக் கைவிட்டு அபிவிருத்திக்காக ஒன்றுபட்டு செயற்படுங்கள்

## கூட்டமைப்புக்கு பிள்ளையான் அறிவுரை



(கொழும்பு)

சாதாரணமாக பதிலுக்கு கை அசைத்ததை தனக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்ததாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் முறைப்பாடு செய்தமை சிறுபிள்ளைத்தனமாக உள்ளதென கிழக்கு மாகண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

அரசியல் இருப்பினை உறுதிப்படுத்திக் கொள்ளவும் கிழக்கில் பயங்கரவாதம் போன்றதொரு சூழ்நிலையையும் மக்களுக்கு வெளிக்காட்டவே நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் இவ்வாறு ஒரு முனைப்பில் ஈடுபட்டுபட்டுள்ளதாகவும் கிழக்கு மாகாண முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இவ்வாறான சிறுபிள்ளைத்தனமான முன்னெடுப்புகளைக் கைவிட்டு கிழக்கின் அபிவிருத்திக்காக ஒன்றுபட்டு செயற்படுமாறு அவர் கூறியுள்ளார்.

நகர சபை, யாழ்ப்பாணம்,



# ஊனமுற்றவர்களுக்கு விசேட செயற்திட்டங்கள்
# அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை



(கொழும்பு)

கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் மாவட்ட வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 12ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டம் அதன் தலைவர் முத்துக்குமார் தலைமையில் நேற்று நடைபெற்றுள்ளது.

இக்கூட்டத்தில் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த இந்து, கிறிஸ்தவ, பௌத்தம் மற்றும் இஸ்லாம் மதங்களைச் சார்ந்த செவிப்புலன் வலுவற்றோர் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டதுடன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் கலந்துகொண்டுள்ளார்.


அங்கு உரையாற்றிய அமைச்சர், இந்நாட்டில் கடந்த காலங்களில் இருந்த பயங்கரவாதம் இன்று இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.

உங்களது கோரிக்கைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் நீங்கள் என்னைச் சந்திக்கலாம் என்பதுடன், எனது முன்னைய அமைச்சான சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் ஊடாக நாடளாவிய ரீதியில் அங்கவீனர்களுக்காக பல்வேறு சிறப்பு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இன்றைய சூழலில் நீங்கள் என்னிடம் வருவதற்கு அச்சப்படவோ, பயப்படவோ தேவையில்லை என்றும், உங்களது நலன்சார் விடயங்கள் கோரிக்கைகள் மற்றும் தேவைகள் முன்னுரிமை அடிப்படையில் தீர்த்து வைக்கப்படும். இதற்காக விசேட செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

தொடர்ந்து, யாழ்-கொழும்பு மாவட்டங்களின் செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனங்களின் அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட கிரிக்கட் சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்ற கொழும்பு மாவட்ட அணிக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வெற்றிக் கிண்ணத்தை வழங்கிக் கௌரவித்தார்

# அரையிறுதிப் போட்டியை பார்க்க வருமாறு நியூஸிலாந்து பிரதமருக்கு ஜனாதிபதி அழைப்பு



(கொழும்பு)


கொழும்பு ஆர்.பிரேமதாசா அரங்கில் நாளைய தினம் இடம்பெறவுள்ள இலங்கை நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான அரையிறுதிப் போட்டியை நேரில் கண்டுகளிக்க வருமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியூஸிலாந்துப் பிரதமர் ஜோன் கீக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் இங்கிலாந்து அணியுடனான காலிறுதிப் போட்டியில் பத்து விக்கெட்டுக்களால் வென்ற இலங்கை அணி நாளைய தினம் நியூஸிலாந்து அணியுடன் அரையிறுதிப் போட்டியில் மோதவுள்ளது.

இந்தப் போட்டியைக் கண்டு களிப்பதற்காகவே நியூஸிலாந்துப் பிரதமரை வருகை தருமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

இதேவேளை, நாளை மறுதினம் மொகாலியில் நடைபெறவுள்ள இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான அரையிறுதிப் போட்டியை நேரில் பார்வையிட வருமாறு இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் பாகிஸ்தான் பிரதமர் கிலானிக்கு அழைப்பு விடுத்ததும், அதனை பாகிஸ்தான் பிரதமர் ஏற்றுக்கொண்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# லிபியா மீது தாக்குதல்; ஜேர்மனி கடும் கண்டனம்




(திரிப்போலி)

லிபியா மீதான நடவடிக்கையில் நேட்டோ படைகள் இரட்டை நிலையைக் கடைபிடிப்பதாக ஜேர்மனி குற்றம் சாட்டியுள்ளது.

லிபியா மீது முழுத்தடை விதிக்காமல் அந்த நாட்டில் இருந்து நேட்டோ நாடுகள் எண்ணெய் வாங்கிக் கொண்டு இருக்கின்றன. அதே நேரத்தில் அந்த நாட்டில் குண்டுகளை வீசிக் கொண்டிருப்பது என்ன நியாயம் என ஜேர்மனி கேள்வி எழுப்பி உள்ளது.

லிபியாவில் 41 ஆண்டுகளாக சர்வாதிகார ஆட்சி நடத்தும் கேணல் கடாபியை பதவியில் இருந்து அகற்ற கடந்த பெப்ரவரி 15 ஆம் திகதி எதிர்ப்பு போராட்டம் வெடித்தது. இந்தப் போராட்டத்தை ஒடுக்குவதற்கு லிபிய இராணுவம் வான் வழித் தாக்குதலை நடத்தியது. இந்தத் தாக்குதலில் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர்.

சொந்த நாட்டு மக்களை கொன்று குவிக்கும் கடாபி ஆட்சியைக் கட்டுப்படுத்த லிபிய வான் எல்லையில் விமானம் பறக்கத் தடை விதிக்க ஐ.நா பாதுகாப்புச் சபை தீர்மானம் கொண்டு வந்தது. இதனைத் தொடர்ந்து லிபிய போர் விமானங்களை வீழ்த்த பிரான்ஸ், அமெரிக்கா, பிரிட்டன், கனடா என நேட்டோ கூட்டுப் படை தாக்குதலை நடத்தி வருகின்றன.

இந்தத் தாக்குதலில் ஜேர்மனி ஈடுபடவில்லை. இதனால் ஐரோப்பிய கூட்டாளிகளின் விமர்சனத்திற்கு ஜேர்மனி ஆளாகியுள்ளது. இந்த நிலையில் லிபியா மீதான முழுத்தடையை பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ் கடைபிடிக்கவில்லை. குண்டுகளை வீசும் அந்த நாடுகள் லிபியாவில் இருந்து எண்ணெய் இறக்குமதியைத் தொடர்ந்து வருகிறது என ஜேர்மனி மேம்பாட்டுத்துறை அமைச்சர் திர்க் நேபல் கூறியுள்ளார்.

# லான்ஸ்கோப்ரல் வீரர் வவுனியாவில் தற்கொலை

(வவுனியா)

வவுனியா-பறையனாலங்குளம் பிரதேசத்தில் அமைந்துள்ள இராணுவ முகாமில் நேற்று முன்தினம் இரவு லான்ஸ் கோப்ரல் ஒருவர் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ள சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடமையை முடித்து விட்டு ஓய்வெடுத்துக் கொண்டிருந்த போதே இவர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

அதேவேளை, இது தொடர்பான மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்றும் தெரியவருகிறது.

# நாவலடி வீதி விபத்தில் மாணவன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை-நாவலடியில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் பாடசாலை மாணவன் படுகாயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

தனது வீட்டிலிருந்து கல்வி கற்பதற்காக தனியார் கல்வி நிறுவனத்துக்கு சைக்கிளில் பயணம் செய்து கொண்டிருந்த போது, எதிரே வந்த மோட்டார் சைக்கிள் இம் மாணவனின் சைக்கிளுடன் மோதிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த விபத்தில் பருத்தித் துறை-நாவலடியைச் சேர்ந்த யோகராசா விதுஷன் (வயது-10) என்ற சிறுவனே படுகாய மடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகிறார். (மி)

# தேர்தலில் வெற்றி பெற்றோரின் விபரங்கள் விரைவில் வர்த்தமானியில் வெளியிடப்படும்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் வெற்றி பெற்று, உள்ளூராட்சி சபைகளுக்கு தெரிவான பிரதானிகள் மற்றும் ஏனைய உறுப்பினர்களது பெயர் விபரங்கள் இன்றைய வர்த்தமானியில் அச்சிடப்படவுள்ளது.

இதுதொடர்பான அறிவித்தல் இன்றையதினம் அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக, தேர்தல்கள் செயலகத்தின் சிரேஸ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

தற்போதைய நிலையில், உள்ளூராட்சி சபைகளை வெற்றி கொண்ட கட்சிகள், அந்தந்த சபைகளுக்கான பிரதானிகளின் பெயர் விபரங்களை அனுப்பி வைத்துள்ளன.

அத்துடன் பெற்ற வாக்குகளின் அடிப்படையில், உள்ளூராட்சி சபைக்கு தெரிவானவர்களது பெயர் விபரங்களை, மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகள் தேர்தல் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டுள்ளார்.


## வேலைக்கு ஆட்கள் தேவை

**பேக்கரி வேலை தெரிந்தவர்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். (போறணை மற்றும் மின் அடுப்பில் வேலை செய்யத் தெரிந்தவர்கள்) 28.03. 2011 ஆம் திகதி இன்றில் இருந்து எதிர்வரும் 31.03.2011 ஆம் திகதிக்கு முன்னர் நேரில் வரவும்.**

தொடர்பு : முத்தையா பேக்கரி,
பஸ்ரியன் சந்தி,
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

C/629


## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னம்மா சுப்பிரமணியம்
### (சின்னம்மா)



மண்டைதீவு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல.37/12, பிறவுண் வீதி, கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா சுப்பிரமணியம் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் வள்ளியம்மை தம்பதியினரின் அன்புமகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மூத்ததங்கச்சிப்பிள்ளை அவர்களின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சீதேவிப்பிள்ளை, கண்ணகை வியாகரத்தினம், கெங்காதரன் ரதிதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியை 28.03.2011ஆம் திகதி இன்று திங்கட்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் சென்று தகனஞ் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : செ.கிருபமூர்த்தி,
(பெறாமகன்).

(113)

# உயிர்த்தியாகம் செய்து பெற்ற சுதந்திரத்தை எதிர்கால சந்ததியினர் பாதுகாக்க வேண்டும்

(கொழும்பு)

உயிர்களைத் தியாகம் செய்து பெற்றுக்கொண்ட சுதந்திரத்தைப் பாதுகாப்பது எதிர்கால சந்தியினரின் பொறுப்பாகும் என கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சோமதிலக திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொத்தலாவல பாதுகாப்புத் தரப்பு பல்கலைக்கழகத்தில் 25ஆவது பிரிவைச் சேர்ந்த கனிஷ்ட அதிகாரிகள் 21 பேரும் திருகோணமலை கடற்படை பயிற்சிப் பீடத்தின் 48ஆவது கனிஷ்ட அதிகாரிகள் பயிற்சிகளை நிறைவு செய்து வெளியேறும் நிகழ்வு நேற்று முன்தினம் திருகோணமலையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பங்கேற்று உரையாற்றியபோதே கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சோமதிலக திசாநாயக்க இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

பங்கரவாதத்திலிருந்து நாட்டை மீட்டுக்கொண்டபோது பெறப்பட்ட வெற்றியை எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாக்கும் பொறுப்பை பயிற்சியை நிறைவு செய்து வெளியேறும் உத்தியோகத்தர்கள் ஏற்க வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 மார்ச் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

28. பதினாறை உரோமன் இலக்கத்தில் எழுதினால்
  1. xiv  2. xvi  3. vvvi

29. 9+8, 8+7, 7+6, 6+5 என்னும் எண்கோலத்தில் அடுத்து வரும் சோடி
  1. 5+6  2. 5+4  3. 6+4

30. தொழிற்சாலை ஒன்றில் ஜனவரி மாதத்தில் 3125 உடைகள் தைக்கப்பட்டன. அவற்றில் 1212 உடைகள் ஆண்களுக்குரியன. பெப்ரவரி மாதத்தில் ஆண் உடைகள் 836 உம், பெண் உடைகள் 1462 உம் தைக்கப்பட்டதுடன், மார்ச் மாதத்தில் ஆண் உடைகள் 918 உம், பெண் உடைகள் 2485 உம் தைக்கப்பட்டன. இத் தொழிற்சாலையில் முதலாம் காலாண்டில் தைக்கப்பட்ட மொத்த உடைகள் எத்தனை?
  1. 10038  2. 5423  3. 4615



**தரப்பட்ட எண்கோலத்தைக் கவனித்து இடைவெளிக்குரிய எண்ணை எழுதுக.**


31. $15\frac{8}{16}$, $10\frac{6}{16}$, $5\frac{4}{16}$, ..........................


32. $3\frac{9}{16}$, $5\frac{7}{16}$, $7\frac{5}{16}$, ..........................

33. [125] → △8 → [135] → △7 → [145] → △ ..........................

**எனில் மூன்றாம் நான்காம் உருக்களின் பெறுமானம் யாது?**

1)   2) 

34.   1) 13  2) 8  3) 20

35.   1) 9  2) 7  3) 12

**பிழையின்றி எழுதப்பட்டுள்ள சொல்லின் கீழ்க் கோடிடுக.**

36. பேராசை , பேறாசை , பேராஸை , பேறாஸை
37. ஏத்தினான் , ஏற்றினான் , ஏத்திநான் , ஏற்றிநான்
38. அனுபவம் , அநுபவம் , அணுபவம் , அறுபவம்
39. தையல்காரன் , தையற்காரன் , தையட்காரன் , தையட்காறன்
40. சுதன்தரம் , சுதன்தினம் , சுதந்தரம் , சுதந்திரம்





# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - I
நேரம் -45 நிமிடம்


# கல்வி முரசு

வெளியீடு 07







இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**பின்வரும் ஒவ்வொரு தொகுதிக்கும் பொருத்தமான குறியீட்டை அடைப்புக்குள் இடுக.**

01. அ)  ஆ) 
02. அ)  ஆ) 

(..........................) (..........................) (..........................) (..........................)

A முன்னாலே வாருங்கள்
B முன்னாலும் பின்னாலும் இருந்து வரும் வாகனங்களை நிறுத்துங்கள்
C முன்னே வாருங்கள்
D நிறுத்துங்கள்

03. அ)  ஆ) 
04. அ)  ஆ) 

(..........................) (..........................) (..........................) (..........................)

A துவிச்சக்கர வண்டி மட்டும் செல்லும் ஒழுங்கை முடிவு
B துவிச்சக்கர வண்டி மட்டும் செல்லும் ஒழுங்கை ஆரம்பம்/தொடர்ச்சி
C பஸ் வண்டி மட்டும் செல்லும் ஒழுங்கை முடிவு
D பஸ் வண்டி மட்டும் செல்லும் ஒழுங்கை/தொடர்ச்சி

**தரப்பட்ட சொல்லுடன் பொருந்தாத படத்தின் கீழ்க் கோடிடுக.**

05. வணக்கத்துக்குரிய
 1)  2)  3)

06. அறிவு
 1)  2)  3)

07. செயற்கை
  

**வியாபார நிலையம் ஒன்றில் உணவு வகைகள் A, B, C, D என்னும் தட்டுக்களில் உள்ளன.**


| A | B | C | D |
|---|---|---|---|
| இறைச்சி | அரிசி | பட்டர் | முருக்கு |
| தேங்காய் | பப்படம் | போத்தல் பால் | பலாக்காய் |
| மரக்கறி | சோயாமீட் | மீன்டின் | தயிர் |

08. எத்தட்டில் உள்ள உணவை அதிக நாட்கள் வைத்திருக்கலாம்.
1. C 2. A 3. D 4. B



09. மாப்பொருள் அதிகமாக உள்ள உணவு.
1. தேங்காய் 2. அரிசி 3. பட்டர் 4. முருக்கு



10. காலாவதியாகும் திகதி குறிக்கப்பட்டாத உணவு.
1. தேங்காய் 2. சோயாமீட் 3. போத்தல் பால் 4. தயிர்

**குறியீட்டைத் தெரிவு செய்க.**




11.  காலையிலேயே  க்குச் 

12.  உடன்பாட்டி  க்குச் 

13.  வியாபாரியிடம் கடன் 





**14-19 ஆகிய வினாக்களுக்கு அடைப்பினுள் உள்ள சொற்களைக் கொண்டு விடை தருக.**
**(லீற்றர், மீற்றர் கோல், மேடைத்தராசு, அடிமட்டம், கிலோமீற்றர், கிலோகிராம், அளவுநாடா)**

14. சில்லறை வியாரியிடம் இல்லாதது

..................................................................................................

15. பாடசாலைக்கும் வீட்டுக்கும் இடையே தூரத்தை அளக்கும் அலகு

..................................................................................................

16. எனது படுக்கை அறையின் நீள அகலத்தை அளக்க உதவுவது

..................................................................................................

17. தையற்காரனிடம் கட்டாயமாக உள்ளது.

..................................................................................................

18. குளிர்பானப் போத்தலில் குறிக்கப்பட்டுள்ள அலகு

..................................................................................................

19. 5 ஆம் தரக் கணிதப் புத்தகத்தின் நீள அகலத்தை அளக்க உதவும் உபகரணம்.

..................................................................................................

**பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்**

20. காற்றினால் பரவாதது - 1) முருங்கை 2) இலவம் 3) தென்னை

21. நீரில் கரையாதது - 1) அரிசிமா 2) யூரியா 3) உப்பு

22. நீர்வீழ்ச்சியன்று - 1) தியலும 2) பீதுறுதாலகால 3) டெவொன்

21. அகதி முகாமில் உள்ளவர்களை பேராளர் சந்தித்தார்.
1. கதியற்றவர், பெரியார் 2. ஏழை, பிரதிநிதி 3. கதியற்றவர், பிரதிநிதி

22. அறிவுரை கூறிய தாயைக் கோபமாகப் பார்த்தான்.
1. தண்டனை, அன்னை 2. புத்திமதி, அன்னை 3. போதல், மாமி

23. முதியவள சென்ற பாதையில் பெரிய பள்ளம் ஒன்றிருந்தது.
1. கிழவி, குழி 2. ஏழை, தெரு 3. கிழவி, தெரு

24. நமது நாட்டின் தலை நகரம் எது?
1. எமது, சிகரம் 2. எமது, பெரிய 3. இந்த, சிகரம்

25. நிலத்தில விழுந்த நெல்லைப் பறவைகள புசித்தன.
1. தலையில், புறாக்கள் 2. தரையில், பட்சிகள் 3. கீழே, பட்சிகள்